போன் நெ. 15. விலை 2 அணா REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 27—12—53 | இதழ் 26

தித்திக்கும் செய்தி!

சோ. அமிர்தகணேசன்:- "இன்னும் 11-ஆண்டுகளில் ஆங்கிலம் அகற்றப்படும். அதற்குள் தமிழ் ஆட்சி மொழியாகாவிட்டால், நமது நிலை என்ன ஆகும் என்று எண்ணிப் பாருங்கள். இன்றே தமிழ் மொழி அரசாங்க மொழியாக, சென்னை சட்ட மன்றம் சட்டத்தினால், இயற்றினால்தான் ஆங்கிலம் அகன்றபின் இடரின்றி தமிழ் ஆட்சி மொழியாக வழங்கமுடியும். மலையாளம், தென்கன்னடம் ஆகிய இரு ஜில்லாக்கள் இன்னும் நம் நாட்டோடு இணைந்து இருந்தால், தமிழ் மொழி ஆட்சி மொழி ஆவது பொருந்துமா என்று சிலர் வினவலாம். அந்த ஜில்லாக்களில் அவர்கள் மொழிகளை ஆட்சி மொழியாக வழங்குவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு.

எஸ். சுயம்பிரகாசம்:- சிறந்த பொக்கிஷமான தமிழ் நம்மிடம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தும், கருவி, நாம். தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமானால், மக்கள் கிளர்ச்சியின் மூலமே, சட்டம் திருத்தப்படவேண்டும்.

இ. மு. சுப்பிரமணியனார்:- தமிழ் ஆட்சி மொழியாகும் வரை நாம் ஓய்ந்திருக்கக்கூடாது. நம்முடைய முயற்சியால், தமிழன்னைக்குரிய இடத்தை நாம் பெற்றுத்தர வேண்டும்.

கே. விநாயகம்:- தமிழ் ஆட்சி, தமிழர் ஆட்சி ஏற்பட இயக்கம் ஆரம்பித்தால் அதற்கு முதற் பலியாக நான் தயார்.

ப. ஜீவானந்தம்:- அன்றாட நடைமுறையில் மக்கள் கருத்து பிரதிபலிக்கவேண்டுமானால் மக்கள் மொழியில் ஆட்சி நடைபெறவேண்டும். எல்லாக் காரியங்களும் மக்கள் மொழியில் நடைபெறவேண்டும்.

ஏ. சாம்பசிவனார்:- வீட்டில் பேசப்படும் மொழியே நாட்டை ஆளவேண்டும் என்பதுதான், காங்கிரசைச் சேர்ந்த எங்களின் கருத்தும். நாம் எதிர்காலத்தில் பொலிவுடன் திகழவேண்டுமானால், தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அறிவுரைப்படி கருத்து வேற்றுமைக்கு இடந்தந்து நடக்கவேண்டும். ஆனால் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருப்பதில் கருத்து வேற்றுமையிருக்கமுடியாது.

ஏ. எல். ராகவனார்:- இப்பிரச்னை சட்டசபையில் வரும்போது எனது கட்சியான திராவிடப்பார்லிமெண்டு கட்சி பூரண ஆதரவளிக்கும்.

ஏ. கோவிந்தசாமி:- இந்தக் கூட்டு முயற்சி தமிழ் ஆட்சி மொழியாகும் என்பதற்கு அறிகுறி. தமிழனின் இன்றைய இழிநிலைக்குக் காரணம், வடநாட்டவரின் ஆதிக்கம்தான். சட்ட மன்றத்தில்மட்டும் தமிழ் பேசப்பட்டால் போதாது; நீதி மன்றம், சர்க்கார் காரியாலயங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சி பெறவேண்டும். குறிப்பாக தமிழ் நிலையங்களில் இந்தி ஆதிக்கம், ஒழிந்து தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும்.

எஸ். சச்சிதானந்தனார்:- தமிழ் மொழி வளர்ச்சியடைந்த பழைய மொழி. அதற்கு இழுக்கு வருவதை நம்மால் சகிக்கமுடியாது. அந்நிய ஆட்சி காலத்திற்கு முன்பே, தாய் மொழிதான் ஆளும் மொழியாக இருந்தது. தாய்மொழி புறக்கணிக்கப்பட்டால் அந்நாட்டு மக்கள் மற்ற நாட்டினரால் இழிவாகக் கருதப்படுவர்.

டி. சண்முகம்:- நாம், இந்தியை அழித்த காலத்தில் மறைந்திருந்தவர்களெல்லாம் இப்போது வந்திருக்கிறார்கள்; புதிய கல்வித்திட்டத்திலும் அப்படியேதான். நல்லவேளை—தமிழ் ஆட்சி மொழியாகவேண்டும் என்ற விஷயத்திலாவது அவர்கள் ஒன்று சேர்ந்தார்களே என்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பி. ராமமூர்த்தி:- குடியாட்சி நடக்கத் தாய்மொழி ஆட்சிவேண்டும். சாதாரணத் தொழிலாளி, உழைப்பாளிக்குக்கூட அரசாங்கத்தில் கலந்துகொள்ள வசதி செய்து கொள்ளவேண்டுமென்றால், மக்கள் மொழி, அரசு மொழியாக இருத்தல் வேண்டும்.

இளவழகனார்:- தாய்நாட்டின் விடுதலையைப் போல தாய்மொழியின் விடுதலையும் ஏற்படவேண்டும். மொழி தலைமை பெற்றால்தான் நாட்டின் தலைமை நமக்கு நன்றாகக் கிடைக்கும்.

எஸ். எஸ். வி. கோவிந்தசாமி:- மதுரையில் நடைபெறவிருக்கும் பஞ்சாயத்து தலைவர்கள் மாநாட்டில் தமிழ் ஆட்சி மொழி குறித்து தீர்மானம் கொண்டுவரப்படும்.

அருணகிரிநாதர்:- தமிழ் மொழியின் ஆக்கம் மென்மேலும் வளர, தமிழரல்லாதவர்கள் மந்திரியாக வரக்கூடாது.

துறையூர் ரங்கசாமியார்:- தமிழ் நம், மொழி. இதனாலேயே, எல்லா அரசுப் பொறுப்புகளும் நடத்தப்படவேண்டும். இந்த உரிமையை நாம் பெறவேண்டும்.

அப்பாதுரையார்:- இந்த மாநாட்டின் முயற்சியை எதிர்ப்பவன் தமிழினத்தின் வைரி; மனிதகுலத்தின் வைரி—என வரலாறு பின்னர் கூறும்.

க. அன்பழகன்:- 'இராமன் ஆண்டாலென்ன— இராவணன் ஆண்டாலென்ன?' என்ற கவலையற்ற தன்மை ஏற்பட்டதற்குக் காரணம் தமிழின் குறையல்ல. தமிழர்கள் இடைக்காலத்தில் ஒரு தூக்கம் தூங்கிவிட்டதுதான்! தமிழ், தாழ்த்தப்பட்டதுதான்!!

கி. ஆ. பெ. விசுவநாதம்:- எந்த நாட்டிலும் அந்த நாட்டு மொழிக்கு ஆதரவு தேடும் மாநாடு நடந்ததில்லை. இந்தத் தமிழ் நாட்டில் இந்நிலை ஏற்பட்டிருப்பது, வெட்கப்படவேண்டியதாகும். இங்கே கூடியிருப்பவர்கள் எந்தக் கட்சிக்காரராலும், அவர்களை முதலில் தன் தாய் நாட்டையும், வளர்த்த மொழியையும் வலுப்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கஜபதியார்:- ஆந்திரநாடு பிரிந்து போக இப்போதிருக்கும் சென்னை மாகாணம் பெரும்பான்மையும் தமிழ்பேசும் மக்கள் கொண்ட நாடாக இருக்கிறது. 14-ஜில்லாக்கள் கொண்ட இம்மாகாணத்தில், 12-ஜில்லாக்கள் முழுவதும் தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். சிறு பகுதியான, 'மலபார்' எனும் பெயர் கொண்ட ஒரு ஜில்லாவிலும், 'கன்னடம்' என்ற பெயர் கொண்ட ஒரு ஜில்லாவிலுமே, மலையாள மக்களும், கன்னட மக்களும் வாழ்கிறார்கள். ஆந்திரம் பிரிந்ததுபோக, மிஞ்சிய சென்னையின் பெரும்பான்மையான பகுதியில் தமிழே, இயங்குகிறது ஏன் தமிழ்மொழியை ஆட்சிமொழியாகச் செய்யக்கூடாது? இதற்கு என்ன தடைகள்?

தமிழை ஆட்சி மொழியாய்ச் செய்வித்தால் பணச் செலவு ஆகும் என்கிறார்கள். நாம் கொடுக்கும் வரிப்பணம் நமக்குச் செலவு செய்யத்தானே இருக்கிறது?

*

தோழர்கள் நெடுஞ்செழியன். என். வி. நடராசன், மற்றும்தோழர்கள் சே. ம. இலக்குமணன், கா.மு. ஷரீப், உமாபதி ஆகியோரின் முழக்கங்களோடு, கடந்த ஞாயிறன்று சென்னை அண்ணாமலை மன்றத்தில் மாபெரும் மாநாடொன்று நடைபெற்று முடிந்திருக்கிறது! பல்வேறு கட்சியினரும், கூடி, தமிழ் முழக்கம் செய்திருக்கிறார்கள்!! முடிவாக, "தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்றும், அதற்கான தீர்மானம் வரும்போது சட்ட சபையினர் யாவரும் ஆதரவளிக்க வேண்டும் என்றும்" வலியுறுத்தி மாநாட்டினர் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

தேனினுமினிக்கும் செய்தியாகக் கருதுகிறோம், நாம்! ஏனெனில், இது போல, எல்லோரும் கூடுவது, சாதாரணமாக நடக்கக் கூடியதல்ல —எல்லோரையும கூடச் செய்யவும், அவர்களோடு உறவாடவும், அவர்களனைவரும் தாயகத்துச் சகோதரர்கள் எனும் கருத்தில் கலந்து பழகவும் விரும்பும், நமக்கு, மிக மிகத் தித்திக்கக்கூடிய சம்பவம் இது.

அண்ணாமலை மன்றத்தில், கூடினார்கள்! யார்? திராவிட முன்னேற்றக் கழகத்தினரா? அல்ல, அல்ல. எல்லாக் கட்சியைச் சேர்ந்தோரும். என்ன பேசினார்கள்? பழனிக்கோவிலுக்குப் பஞ்சாமிர்தம் படைப்பது பற்றியும், திருப்பதி குடைபிடிக்க தர்மகர்த்தா நியமிப்பது குறித்தும், தேவநாகிரிலிபிக்கும் ஆங்கில லிபிக்கும் 'பாலம்' அமைப்பதுபற்றியும் அல்ல, அவர்கள் பேசியது. 'சமஸ்கிருதத்தில்' இரண்டு சுலோகம்—வேத விளக்கத்தில் கொஞ்சம் இரண்டு உபநிஷத வியாக்யானம்—இப்படிச் செய்துவிட்டு, 'அசோ வாரும் பிள்ளாய்! ஆஸ்தீகம் அழிகிறது. நாஸ்தீகர் நாத்தெழும்பேறுகிறது. அழிக்கவேண்டும். கொடு நன்கொடை! போடு, 'செக்'கில் கையெழுத்து!!" என்று வந்திருந்த ஜரிகைமடிப்புப் போட்டவர்களையும், காரோறிகளையும், 'கனம்'களையும், குறுநிலமன்னர்களையும், விரல்விட்டு எண்ணி, பிறகு பையின் 'கனம்' எவ்வளவாகியிருக்கும் என்று கணக்கிடும், 'காரியம்' அல்ல அங்கே நடந்தது. தாய்மொழியின் உயர்வு குறித்து, பேசினர்! அதனை அரியாசனத்தில் அமர்த்தவேண்டிய அவசியம்பற்றி வற்புறுத்தினர். தமிழ் அங்கே, மணம் வீசிக்கிடந்தது. கூடினோரெல்லாம், ஒரு நிமிடம், தாமெல்லாம் வாழ்ந்த பரம்பரையின் வீழ்ந்த சித்திரங்கள் என்பதை எண்ணினர் — எடுத்துரைத்தனர்.

'தமிழ்' என்றால் — இந்த 'சு.மக்கள் காரியம்-திராவிடத்தார் ஏதோ கூச்சல் போடுகிறார்கள் — கழக ஆசாமிகளின் தமிழ் வெறியைப் பார்—என்று ஏளனமும் கேலியும் எடுத்து வீசப்பட்டதுண்டு. அந்நிலைமாறி, எல்லோருள்ளத்திலும் தமிழின் உயர் நிலைபற்றிய ஆர்வம் கரை புரண்டோட ஆரம்பித்திருப்பது நாண, அகமகிழ்வு, ஏற்படத்தான் செய்யும்.

தமிழுக்காகத் தடியடிகளைத் தாங்கி, பிணங்களைத்தந்து சிறைக்குள் கிடந்து, சித்ரவதைகளால் உருமாறிப்போன நமக்கு இந்தச் சம்பவம் மிக மிக மகிழ்ச்சி தருகிறது.

தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும்! — இந்த முழக்கம், தேவையற்றதல்ல. இது தேவையென்பதை எடுத்துக்காட்ட, விளக்கங்கள் வேண்டியதில்லை. தமிழ் அரியாசனத்தில் அமர்ந்திருந்த காலம் ஒன்று இருந்தது! அந்தக் காலத்தில் கடல்கடந்த நாடுகளிலிருந்தும் பலர், தமிழகமண்ணிற்கு வந்து வாணிபம் நடாத்தியதும் உண்டு. எழிலும் பொலிவும், சிறக்க இன்பாசோச்சிய தமிழ் இன்று ஏட்

டிலும், நாட்டிலும்தானிருக்கிறது. அரசில் இல்லை. அங்கேஇன்னொரு மொழி, தேவைப்படுகிறது. வீட்டில் பேச—கொஞ்ச— வாழ—தமிழ் பயன்படுகிறது. ஆனால் அந்தக் காரியங்களை நிறைவேற்ற, நீதிமன்றத்தில் நீதி தேட, தமிழில்லை—மாற்று மொழி. கண்ணிரண்டையும் விற்று சித்திரம் வாங்குவதுபோல, வாழ்க்கையின் வழியாகிய மொழியினை எட்டி உதைத்து, 'நாகரிகப் போர்வை'யில் உலவும் 'நல்லவர்களும்' இல்லாமல் இல்லை. அவர்கள் தேசியமென்பார்கள் ஒரு முறை — அகண்ட பாரதமெனச் சொல்லுவார்கள் மற்றோர் முறை—அதனால் இந்தி மொழி அவசியம் என வலியுறுத்துவார்கள், அடிக்கடி. இந்த விசித்திரசித்தர்களின் கூத்தைக் கண்டு வெந்து நைந்துபோனோர், நாம்.

நாட்டில், மேட்டுக் குடியினரும், உயர்சாதியினரும், வாய்ப்பும் வசதியுமிருந்த காரணத்தால், ஆண்ட மொழியினைக் கற்றுக்கொண்டு, அரசியல் பதவிகளை வேட்டையாட ஆரம்பித்தார்கள். ஆனால், நாட்டின் முதுகெலும்புபோன்ற ஏழை மக்களுக்கு, அரசாங்க மொழியினை அறியவும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால் அரசாங்கத்திடமிருந்து ஏதாவது, உத்திரவு வருமாயின் அதை எடுத்துக்கொண்டு, இங்கிலீஷ் படித்தவரைத்தேடிச்சென்று விளக்கம் பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டு வருகிறது! கோர்ட்டுக்கு நீதிபெறச் சென்றாலோ, அங்கும் இதே நிலைதான். தமிழால், பயன் பெறமுடியாது. அதற்கு ஆங்கிலமறிந்த வக்கீல் வேண்டும்.

நாட்டின் நடமாடும் சின்னங்கள் இவர்கள்! ஆனால், நாட்டில் நடைபெறும் சர்க்கார் காரியங்களையும், நடவடிக்கைகளையும் தெரிந்துகொள்ள அவர்களால் இயலாது. ஆங்கிலமே தெரிந்திருக்க வேண்டும். இவ்வண்ணம், ஆட்சி மொழி வேறானதால், ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையே பெரியதொரு பள்ளம் ஏற்பட்டது. ஏழைகளால் அந்தப் பள்ளத்தைத் தாண்ட முடியவில்லை! வாய்ப்பும், வசதியும் பெற்றோர் அதிபதிகளாயினர். இந்த நிலை இனியுமா வேண்டும்? — இதனையே, அண்ணாமலை மன்ற மாநாடு, கேட்டிருக்கிறது.

மாநாட்டுக்கு இரு தினங்களுக்கு முன்பு டில்லி வர்த்தக மந்திரியான டி. பி. கர்மார்கர் என்பார் தாய்மொழியின் சிறப்புப்பற்றி பம்பாயிலே பேசியுள்ளார். "நாட்டுப்பற்றுக்கு அடுத்தபடியாக விளங்குவது மொழிப்பற்று. என்றாவது ஒரு நாள் இந்தி நம் எல்லோரையும் ஒன்று படுத்தலாம். ஆனால், அந்நாள் வருமோ, வராதோ — சந்தேகமே."

பேசியவர் டில்லி மந்திரி! நாட்டுப்பற்றுக்கு அடுத்தபடியாக இருப்பது, மொழிப்பற்றெனகிறார், அவர். அதோடு, தேசியமொழி யெனப்படும் இந்தியின் நிலைமையையும் விவரிக்கிறார். இந்தச் சந்தேகம், இன்று எல்லோரிடத்திலும் ஏற்பட்டு வருகிறது. காரணம் 'இந்தி என்றும் இந்நாட்டுமக்களை இணைக்க முடியாது' என்று, அன்று நாம் சொன்னதையேற்க மறுத்தோர், இன்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். உண்மையின் ஒளி, பிடிவாதக்காரர்

'திராவிட நாடு'

பொங்கல் மலர்

ஓர் தித்திக்கும் சுரங்கம்!

*

சி. என். ஏ.

தீட்டும், கதை—கட்டுரைகள்

*

கழக முன்னணி வீரர்கள் வழங்கும்

அறிவுப் படையல்கள்

*

மூன்று கலர் ஆர்ட் முகப்பு

*

★ ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய மலர் ★

*

விலை ரூ. 1

ஏஜண்டுத் தோழர்கள், தங்களுக்குத் தேவையான காப்பியின் எண்ணிக்கை விபரத்தையும், அதற்குரிய தொகை முழுவதையும் 30—12—53-க்குள் அனுப்பவேண்டும்.

மலருக்குரிய தொகை முழுவதும் 30—12—53-க்குள் அனுப்பாதவர்களுக்கு மலர் கண்டிப்பாக அனுப்ப முடியாது.

தனி மலர்

தனி மலர் தேவைப்படும் தோழர்களும், சந்தாதாரர்களும் ரூபா 1—7—0 அனுப்பினால், ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும். இதனால், மலர் கிடைக்கவில்லை என்ற குறை ஏற்படாது.

நிர்வாகி.

களின் கருத்திலும் உரைக்கத்தலைப்பட்டிருக்கிறது. இந்த உளமாறுதலை, இங்குள்ள தேசியத் தோழர்களிடமும், காணமுடிகிறது. ஒருபோது நம்மைக் கிண்டல் செய்த, தேசிய ஏடுகளும், தேசியவீரர்களும் இன்று 'தமிழ்! தமிழ்!' என்று பேச ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழின் சிறப்பைப்பற்றிப் பேசினால்தான், தாங்கள் உலவமுடியும் என்கிற பயம்கூட, சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை கண்ணுக்கு குளிர்ச்சி! கருத்துக்கு செந்தேன்!!

எனவேதான், அண்ணாமலை மன்ற மாநாடு, நமக்குத் தித்திக்கும் செய்தியென்றோம்.

இதனை எடுத்துரைக்கும்போது மற்றொன்றையும் மறந்துவிடவில்லை. அண்ணாமலை மன்ற மாநாட்டின் நோக்கம் தமிழ், ஆட்சி மொழியாக வேண்டும் என்பதுதான்!

மலர்வனத்தில், மந்திக்குத் தெரியாமல், மல்லிகையைப் பறித்தெடுத்து, முகர்ந்து அனுபவிப்பது, ஆனந்தத்துக்குரிய விஷயமே. ஆனால், மந்தியை, மலர் வனத்தை விட்டு, விரட்டிவிட்டு, மலர்கள் முழுமையும் சொந்தமாக்கி, சூட்டி மகிழ்வது, அதைவிட ஆனந்தமன்றோ?

தமிழ் ஆட்சி மொழியாதல், மல்லிகையின் மணத்தை ரசிப்பது போல! ஆனால், அதனை ரசித்துக் கொண்டிருக்கும்போதே, மந்திக் கூட்டம் புகுந்து சங்கடம் விளைவிக்கலாமே. இதனைப் போக்க, மந்தியின் கையிலிருந்து மலர் வனத்தை விடுவிப்பதுபோல, இந்தி ஆதிபத்ய ஆட்சிக்காரர்களிடமிருந்து தமிழகத்தை விடுவிக்கவேண்டும். தமிழ் ஆட்சி மொழியானால் மட்டும் போதாது—தமிழ் ஆட்சி, கமழ வேண்டும்! அப்போதுதான், தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டதன், பலன்களைப்பெற முடியும்.

அண்ணாமலை மன்ற மாநாடு, தமிழ் ஆட்சி மொழியாவதைப்பற்றியே, முடிவு செய்திருக்கிறது. தமிழர் ஆட்சி ஏற்படுவதைப்பற்றி, சிலரே, வலியுறுத்தியிருக்கின்றனர்.

தமிழ் ஆட்சி மொழியாவதும் இப்போது, எளிதாகும். அதனை மாநாட்டுக்குத் தலைமைதாங்கிய கஜபதியார் அவர்கள் விளக்கியிருக்கிறார். ஆந்திரம் பிரிந்து, எஞ்சி நிற்கிறது, சென்னை! இதிலும், ஒரு சில மலையாள கன்னடப் பிரதேசங்கள், சேர்ந்து கிடக்கின்றன. இந்தப் பிரதேசங்களை, அந்தந்த மொழிப் பிரதேசங்களுடன் இணைத்துவிட்டால் போதும் தமிழகம். காட்சிதரும்! அந்தந்த மொழிகளில், அந்தந்த வட்டாரங்கள் பிரிக்கப்படவேண்டுமென்பதை நம்முடைய மாநில மாநாட்டுத் தீர்மானம, நன்றாக விளக்கியிருக்கிறது. அவ்வண்ணம், மொழிவாரியாகப் பிரதேச எல்லைகள் வரையறுக்கப்பட்டு—அவைகள் வடநாட்டினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டால்—நாம் விரும்பும் திராவிடக் கூட்டாட்சி என்பது, எளிதாகிவிடும். இதனைப் பன்னிப்பன்னி சொல்லி வந்துள்ளோம். திராவிடக் கூட்டாட்சி என்பது, சில பொது விஷயங்களைக் கவனிக்கும் ஒரு ஆட்சி முறையே தவிர, பிறர்மீது ஆதிக்கம் செலுத்துவது அல்ல. அந்த ஆட்சி முறையில், அந்தந்த மொழியினர், சுதந்திரமாக உலவலாம்! சுய மகிழ்வு பெறலாம்!! இந்த ஆட்சி முறையால், அகில உலக விவகாரங்களையும், பொதுப் பிரச்னைகளையும், கவனித்துக் கொள்ளலாம். இதற்குப்பொது மொழியாக, உலக மொழியை வைத்துக்கொள்ளலாம். இதனை, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, தன்னைச் சந்தித்த இந்தி நல்லெண்ணத் தூதுக் குழுவினரிடம், பொதுச் செயலாளர் எடுத்துரைத்திருக்கிறார். எனவே, தமிழ் ஆட்சிமொழியாதலும்—அதேபோல மற்றப் பிரதேசங்களில், அந்தந்த மொழிகளே ஆட்சிமொழி யாக்கப்படவேண்டும் அதோடு மொழியின்மீதும், ஆட்சி மீதும் டில்லி அதிபர்களுக்கிருக்கும் பிடியும் அழிக்கப்படவேண்டும். அப்போதுதான் உண்மையான விடுதலையைப்பெறமுடியும்! அதனை தமிழ் ஆட்சி மொழி மாநாட்டினருக்கு, நாம் எடுத்துரைக்க விரும்புவதோடு—அவர்களின் இந்த ஆரம்ப முயற்சிக்கு நம்முடைய வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உடனடியாக, தமிழை ஆட்சி மொழியாக்க, அரசியலார் தயங்காரெனவும் எதிர்பார்க்கிறோம்.

வழக்கம்போல இந்த விஷயத்திலும், 'ஏடாகூடம்' செய்யத்துவங்கினால், அதனை மட்டந்தட்டி, உரிமையை அடைய சகல கட்சி சட்டசபையினரும் முன்னின்றுபோராட வேண்டுமென அழைக்கின்றோம்.

எமது புதிய வெளியீடுகள்

சிறைச்சோலையில் பூத்த மலர்கள்—திராவிடப்பண்ணை தரும் தேன் விருந்து
தமிழன்னைக்குக் கலைஞர் சூட்டும் தங்க மகுடம்.

இரத்தக் கண்ணீர் ரூ. 2—0—0
நாடகவேந்தர் மு. கருணாநிதியின் புதியகற்பனை. பொன்னின் ஒளி வீசும் எழுத்தோட்டம். தெவிட்டாத தெள்ளமுதம்.

ஆறுமாதக் கடுங்காவல் ரூ. 2—0—0
திராவிடர் வரலாற்றுக்குத் துணைபுரியும் நல்லேடு. கருணாநிதியாரின் கல்லக்குடி போராட்டக் குறிப்புகளும், சிறைவாழ்வின்வர்ணனைகளும் அடங்கிய சிந்தனைச் சுவடி. கருணாநிதி எழுதியது.

முத்தாரம் ரூ. 1—0—0
புரட்சி எழுத்தாளர் கருணாநிதியின் பேனாமுனை எழுப்பும் புதிய முறை. ஆம்; கற்பனைக்கே புதிய வழி காணுகிறார், இந்த நூலின்மூலம். அறிஞர் உலகும், இளைஞர் உலகும் அழைத்துப் பயன் காணும் அறிவுச் சோலை.

திராவிடப் பண்ணை, தெப்பக்குளம்—திருச்சி.

அவர்கள் போக்கு

பலத்த ராணுவத்தை உருவாக்க வேண்டுமென கம்யூனிஸ்டு ஏ. கே. கோபாலன் கூறுகிறார்.

ஆசிய நாடுகளின் முக்கிய மந்திரிகள் கூடிப் பேச வேண்டுமென இலங்கைப் பிரதமர் கோத்தலவாலா, அறிக்கை விடுத்துள்ளார்.

சென்னையிலொரு மூலையிலிருக்கும் முகமது உஸ்மான் என்பார், கண்டிக்கிறார், பலமாக.

டில்லி காங்கிரசார், மாபெரும் கண்டன ஊர்வலம் நடத்தி, ஆட்சேபத்தைக் காட்டுகின்றனர்.

ஏடுகளில் எல்லாம் பர பரப்பு! இதுபற்றிய விஷயங்களே, மும்முரமாயுள்ளன!!

டில்லித் தலைவர் நேரு பண்டிதர். பாராளுமன்றத்திலே, மிகப் பெரியதோர் பிரசங்கம் நிகழ்த்தியிருக்கிறார்.

*

அமெரிக்க அரசாங்கத்துடன், பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தம் செய்துகொள்ளப்போகிறதாம்! இந்தச் செய்தி கேட்டு, தேசியப்பீரங்கிகளும், நாட்டுத் தலைவர்களும், பரபரப்பு கொண்டிருக்கின்றனர். பக்கத்து நாடு, பாகிஸ்தான்—அங்கே, அமெரிக்க ராணுவ தளம் அமைப்பது, ஆபத்து—அதனால் உலகசமாதானம் கெடும்—என்று, கண்டனங்கள், கேட்டுக்கொண்டிருக்கின்றன. கண்டனக் குரலைப் பலர் எழுப்புவதால், ஒவ்வொரு குரலிலும் ஒவ்வொரு மாதிரியான 'சுருதிபேதம்' காட்சியளிக்கிறது. பாகிஸ்தானில் ராணுவதளம் அமைவது, ஆபத்து என நெஞ்சார நம்புவோரிருக்கிறார்கள். அவர்களைத் தவிர, இன்னும் பற்பல காரணங்களால், இந்த முயற்சியைக் கண்டிப்போரும் இருக்கிறார்கள்.

"பாகிஸ்தானுக்குப் பலம், வருவதா? ஐயோ! ஆபத்தாச்சே!! நம்மை மிரட்ட ஆரம்பித்துவிடுமே" இப்படிச் சிலர்.

"பாகிஸ்தானுக்கா, இந்த யோக்கியதை? அகண்டபாரதம் நாமிருக்க ஆசிய ஜோதி நேரு இருக்க, அவர்களுக்கா, அமெரிக்கா துணை போவது!"—இப்படிச் சிலர்.

"அமெரிக்காவிற்கு எதிராக, இந்திய அரசியல்வாதிகளைத் திருப்பி, சர்வதேச அரங்கில் ரஷ்யாவின் பக்கம் இந்தியாவை இழுத்துச் செல்ல, இதுதான் தருணம்"—இந்தக் கருத்துடன் சிலர்.

இவ்வண்ணம் தத்தமதுகருத்துக்கேற்றபடி, அவரவர்கள் இந்தப் பிரச்னையை நோக்குகின்றனர். ஆனால், 'இது கூடாது!' எனும் குரலைமட்டும் ஒரே 'ஸ்தாயி'யில், எழுப்புகின்றனர்.

*

மக்களும், அவர்களை வாழ்விக்க மாநிதிகளும், நஞ்செய்க் காடும் புஞ்செய் பூமியும், பூந்தோட்டமும், மலையும், வளமும் குலுங்கும் பூமிகளிலே, மாற்றார் எந்த ரூபத்தில் நுழைவதையும், நாம் கண்டிப்போம்—பிறருடைய வீட்டில் புகுந்து அவர்கள் காரியங்களில் தலையிடும் அரசியல் சிறுமதி—ஆதிபத்யத்தின் அறிகுறியாகும். இந்த அறிகுறி, 'பணம்' ரூபத்தில் வந்தாலும், 'கோதுமை' உருவில் குவிந்தாலும், 'ராணுவம்' என்ற பெயரில்கொண்டு வரப்பட்டாலும், அவை, நாட்டின் நரம்பை அயலானிடம் அடகு வைப்பதாகும். இந்த 'ஆதிக்க அரிச்சுவடியை' அன்றுமுதல் கூறிவரும் நமக்கு, பாகிஸ்தானில் படைத்தளம், அது அமெரிக்காக விளங்குவதும், விபரீதத்தின் விளைவெனக் கண்கூடாகத் தெரிகிறது! இந்த விபரீதத்தை, இன்று நேரு பண்டிதரும் பிறரும் விளக்கமுறப்படும்போது, வேதனையாயிருக்கிறது!! ஏனெனில், கள்ளிக் காட்டுக்குள் நுழையாதே — அங்கே கருநாகமிருக்கிறது—என்று, நாம் கூறியபோது கேட்டனரா — இவர்கள். ஆகா, என்னென்ன சொல்லினர்—எப்படி எப்படி வர்ணித்தனர்.

"பசி என்றோம். கோதுமை, கோதுமையாகக் கொட்டுகிறது, அமெரிக்கா. விஜயலட்சுமிதேவியார், அமெரிக்க ஜனாதிபதியுடன் அளவளாவும் ஆனந்தம் காணீர்!"

"நேரு சென்றார் அமெரிக்காவுக்கு. அபரிமித வரவேற்புஅளிப்பதைப் பாரீர்! என்னே, ஆசிய ஜோதியின் பெருமை. இந்தியாவின் வளர்ச்சிக்காக, எதையும் உதவுவதாக, அமெரிக்கா உறுதி தந்துவிட்டது."

"எல்லாம், நேருவின், முகவிலாசம். இந்த அமெரிக்கர் வந்தாலும் எமது நேருவையன்றோ, காண்கின்றனர். அவருடைய தயவைப் பெறுவதில், ஓடோடியும் வருகின்றனர். உதவியெல்லாம் செய்கின்றனர்"

'யாருக்குக் கிடைக்கும் இப்பெருமை? நேரு, ஆசியத் தலைவர்! விஜயலட்சுமி, உலகத் தலைவர்!! ஆகா, இந்தியா புனிதமடைந்துவிட்டது. எமது விஜயலட்சுமி தேவி, ஐக்கிய நாடுகள் சபையின் தலைவியாகிவிட்டார்."

இவ்விதம் குதூகலப்பண் பாடி, கொட்டு முழக்கி, கும்மாளமடித்ததை நாடு அறியும். உலகத்தையே, பிடித்து விட்டதுபோல, இறுமாந்து பேசினர்! 'மகிழாதீர்—இது, வலைவீச்சு', என்று நாம் குறிப்பிடும்போது, ஏசினர்!! இன்றோ, முகத்தைத் தொங்கவிட்டபடி, உலவுகின்றனர்,

அமெரிக்கருக்கும் தமக்குமிடையில் நிலவும் நேசத்தைக் காட்டி உலக நாடுகளிடையே பிரமிப்பை உண்டாக்க முயன்றதில் காட்டிய அளவு ஆர்வத்தை, அத்தகைய முறை தரும் பலாபலன்களை எண்ணிப் பார்ப்பதில், தவறிவிட்டனர் டில்லிக் கம்பெனியினர்.

அது தான், இன்று வந்திருக்கும் ஆபத்துக் காரணமென்போம்.

பாகிஸ்தான், அமெரிக்காவிடம் ஓடி, ராணுவ ஒப்பந்தம் பேசும் படியான அளவுக்கு அவசியம் ஏற்பட்டதற்குக் காரணம், டில்லிக் கம்பெனியின் போக்குதான்.

பண்டிதரின்' 'ராஜதந்திர முறையும்' —படபடப்பும்—இந்திய பிரச்சார பீரங்கிகளின் ஓயாக் கூச்சலுமே, இந்த வேதனையை உருவாக்கியிருக்கிறது.

பாகிஸ்தான், பக்கத்து நாடு! புதிதாக அமைந்த நாடு!! அதுமட்டு

மல்ல, விசித்திரமான அமைப்பையும் கொண்ட நாடு. ஒரு பாகம் மேற்கேயிருக்கிறது! இன்னொரு பாகம் கிழக்கேயிருக்கிறது! இந்த இரு 'துண்டு'களும் சேர்ந்துதான், பாகிஸ்தான். இந்த விசித்திரமான அமைப்பைக் கொண்ட இப்புது நாட்டை, அரும்பிய நாள் முதல், அருவருப்போடு பார்த்துவருகின்றனர்— டில்லிக் கம்பெனியினர். அதன் விளைவாகத் தொடங்கி நடத்தப்படும் காஷ்மீரச் சண்டை, இன்னும் முடிவடையவில்லை.

இந்த நிலையில், அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே 'விஜய லட்சுமியார், ஐ. நா. தலைவி,'யாகுமளவுக்கு நேசம் வளருவதையும், அதுபற்றி அந்தாதிபாடும் தேசியப் பீரங்கிகளின் வர்ணனைகளையும் கேட்கும்போது, அச்சம், எழாதா பாகிஸ்தானுக்கு! 'என்ன செய்வது?', எனும் பயம் ஏற்படாமலாயிருக்கும்!! எதிர் வீட்டு எதிரி, ஊராளும் 'கேடி'யிடம் அதிகத் தொடர்புடன் பழகுகிறான் என்பதைக்காணும்போது—பக்கத்து வீட்டுக்காரனுக்கும் பதைபதைப்பும், திகைப்பும் உருவாகத்தானே செய்யும்.

இந்தத் திகைப்பு உருவாக வேண்டுமென்பதற்காகவே, இந்திய ஏடுகள் அனைத்தும், பிரச்சார முரசை முழக்கினர்.

எதிர்பார்த்தபடி திகைப்பு, உருவாயிற்று. ஆனால், எதிர்பாராதபடி, அமெரிக்கா, பாகிஸ்தானுடன்குலவ ஆரம்பித்திருக்கிறது.

*

மண் வெட்டியெடுத்து வெட்டுகிறார்! கிராமக் கிழவி யொருத்தி ஆரத்தி எடுத்து மாலை சூட்டுகிறார்! சின்னஞ் சிறு குழந்தையொன்று அன்போடு ஆடுகிறது! இவ்வண்ணம் திரைப் படச்செய்திக்கதிரில், இந்தியாவுக்கு வந்துசென்ற அமெரிக்கத்துணைத் தலைவர் நிக்ஸனுக்கு வழங்கப்பட்ட வரவேற்புகளை, டில்லிக்கம்பெனி வெளியிட்டுள்ளது. நிக்சனும் ஆச்சாரியாரும் அளவளாவிய வகை—அவரும் இவரும் பாராட்டிக் கொண்டது—விமான நிலையத்தில் அளிக்கப்பட்ட வழியனுப்பு வைபவம் கடந்த சின்னாட்களுக்கு முன்பு நமது ஏடுகளை யெல்லாம் நிரப்பின. அந்த ஆனந்தம் உலரவில்லை—பாகிஸ்தான் செய்தி வந்துள்ளது.

இந்தியாவில் அமெரிக்க உதவி கொண்டுசெய்யப்படும், 'கம்யூனிடி' திட்டம்பற்றி, நிக்சனுக்குள்ள சிரத்தையை விளக்கவே, மேற்படி ஆடம்பரங்களெல்லாம் செய்யப்பட்டன. அந்தச்சிரத்தையின் அழகு, அடுத்த வாரத்திலேயே, வெளிச்சமாயிருக்கிறது. கம்யூனிடி திட்டம் மட்டுமா! எத்தனையெத்தனையோ திட்டங்களின் பெயரைச்சொல்லி, அமெரிக்காவிடம், கடன்பட்டிருக்கிறது, இந்தியா. கடன் தொகை, சொற்பமல்ல! எண்ணியமாத்திரத்தில் எடுத்து வீசிவிடக்கூடியதுமல்ல!! இவ்வளவு கடன் பட்டிருக்கும் இந்த நாடு, தான் எது செய்தாலும், எதிர்த்துப் பேசாதெனும் துணிவு, அதிகமாயிருக்கிறது, அமெரிக்கருக்கு. கடன்பட்டு விட்டால், பின், காலமெல்லாம் அடிமைதானே! கடனைக்கொடுத்து, இந்தியாவை அடகு வாங்கியிருக்கிறோம், இனி என்ன? என்று, நிக்ஸன் மகிழ்ந்துலவுகிறார், வெள்ளை மாளிகையில். டில்லியிலிருக்கும் பண்டிதரோ, விசாரத்தால் உந்தப்பட்டு விழிக்கிறார்.

இது ஏற்படக் கூடும் என்பதால்தான், எச்சரித்தோம், நாம். அப்போது, 'அமெரிக்காவுக்கு இந்தியாவின் மீதுள்ள ஆசை எவ்வளவு தெரியுமா,' என்றனர். ஆசையின் அழகா, இது! பாகிஸ்தான் பயத்தால், தன்னை நாடினாலும், உண்மையில் பரிவுக் குணம் இருக்குமேயானால், இந்தியாவையும் கலந்தன்றோ, இந்த ஏற்பாட்டைச் செய்திருக்க வேண்டும்? செய்ததா, அமெரிக்கா! இல்லை-இல்லை. அது, செய்யாது. ஆதிபத்ய ஆசையுடன், அகப்பட்டதையெல்லாம் சுருட்டும் தந்திரம் கொண்ட, டாலர் பூமியாச்சே, அது. எப்படி, இதனைச் செய்யும்? இந்தப் போக்கைக் கண்டதாலேயே பண்டிதர் பாராளுமன்றத்தில், வேகமான வார்த்தைகளுடன் பிரசங்கம் செய்திருக்கிறார். அமெரிக்காவின் போக்கைக் கண்டித்திருக்கிறார் — அதோடு, ஆசியாவிலுள்ள நாடுகளின் பொறுப்பை எடுத்துரைத்

★ முஸாதீக் ★

"மன்னிப்பு வழங்கியிருக்கிறார். உனக்கு மரண தண்டனை இல்லை. இந்தா, இதைப்படி!"

"முடியாது. எனக்கு மன்னிப்பு வழங்கத்தேவையில்லை. சட்டத்தின் படிச் செய்யுங்கள். சாக, மூன்று நாள்தானே இருக்கிறது"

*

பாரசீகவீரர் முஸாதீக், விசாரணை மன்றத்தார், நீட்டிய மன்னரின் கடிதத்தை வாங்கிப் படிக்கவும், மறுத்தார். முஸாதீக்கின் பழைய சேவையையும் நாட்டுத் தொண்டினையும் பாராட்டி, அதனால் மரணதண்டனையிலிருந்து அவரைத் தப்பவைப்பதாக, மன்னர், கடிதம் தீட்டியிருந்தார். அந்தக் கடிதத்தைப் படிக்க மறுத்து, தண்டனை எதாயினும் ஏற்கச் சித்தமாக இருப்பதாக, அவர், தெரிவித்திருக்கிறார். முடிவில், நீதி வழங்கப்பட்டுவிட்டது.

*

'துரோகக்குற்றத்துக்காக மூன்றாண்டு சிறைத் தண்டனை அளிக்கிறேன்"

"மகிழ்கிறேன். என்னை தண்டித்ததற்காகமகிழ்கிறேன். என் கௌரவத்தை, இத்தண்டனை, அதிகரித்திருக்கிறது. இனியாவது பாரசீக மக்கள், அரசியலமைப்பின் அழகைத் தெரிந்து கொள்வார்கள்."

*

முதுகிழவர்! அவருக்கு மூன்றாண்டு தண்டனை!! எனினும், முக மலர்ச்சியோடு, ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த உறுதியின் முன், எது வெற்றிபெறமுடியும்? இதன் மூலம், முஸாதீக், ஒருசரித வீரராகி விட்டார்! தன்னுடைய எண்ணங்களைச் சரியெனநம்பி—அதனைநடைமுறையாக்க முயன்றதில் தவறில்லையெனக்கூறி—கடைசிவரை வாதாடி, தண்டனை பெற்றுவிட்டார்!! சிறைக் கதவுகள், அவரை, மூடிக்கொள்ளும். ஆனால், விடுதலை வீரரின் புகழ்க் கூடம், அவர் பெயரை, கையேந்தி, வரவேற்கும்.

திருக்கிறார் — இலங்கைப் பிரதமர் யோசனைப்படி ஆசியப் பிரதமர்கள் அடிக்கடி சந்திக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார். இந்த முறை, பார்லிமெண்டில், பண்டிதர் பேசியது, குறிப்பிடக் கூடிய ஒன்று.

அவரைத் தொடர்ந்து பேசிய ஒரு மெம்பர், 'இதெல்லாம், அமெரிக்காவின் சதி. அமெரிக்கா, உலகத்தின் முதல் நம்பர், எதிரி,' என்று உற்சாகத்தோடு பேசியிருக்கிறார். பண்டிதரே பேசியபோது, தான் பேசினால் என்ன! எனும், தைரியம், மெம்பருக்கு. அதனால், அமெரிக்க ஆதிபத்யம் வலைவீசி வரும் போக்கு —அதனால் ஏற்படும் ஆபத்து — அதனை வளரவிடாமற் செய்யவேண்டிய அவசியம் — அத்தனையையும், எடுத்துச் சொல்லி, முழக்கமிட்டிருக்கிறார். ஆனால், என்ன நேர்ந்தது, தெரியுமா? அவருக்குப்பின் பேசிய பண்டிதரின் சகோதரி, ஐ நா. மன்றத் தலைவியால். இதனைச் சகிக்க முடியுமா! அமெரிக்காவையன்றோ, மெம்பர், தாக்கிப் பேசிவிட்டார் — ஆகவே, விஜயலட்சுமியார், மெம்பரின் கண்டனப் பேச்சை காரசாரமாகக் கண்டித்து-அமெரிக்காவின் நல்லெண்ணம் குறித்து வானளாவப் புகழ்ந்திருக்கிறார். மீண்டும், அமெரிக்கா செல்லவேண்டுமல்லவா, அவர்!!

*

அம்மையார், அதோடு இருந்துவிடவில்லை—'உலகத்தில் இந்தியா ஜொலிக்கும்உன்னதநிலையை'ப்பற்றி விரிவாக எடுத்துரைத்திருக்கிறார். அதற்குள்ள ஒரே—காரணம், இந்தியாவின் வெளிநாட்டிலாகாவின், கொள்கையாம். சகோதரரின் சாமர்த்தியத்தைச் சகோதரி, பாராட்டுகிறார்!! உலகில் ஜொலிக்குமளவுக்கு ராஜதந்திரம், மிக்கதாம் இந்தியாவின் அயல் நாட்டிலாகா. மூக்கறுபட்டவனைப் பார்த்து, உன்போல் வீரனுண்டோ?— என்று கூறுவதையும் மிஞ்சியிருக்கிறது, தேவியின் கூற்று. சகோதர பாசம் தள்ளிவிடுவோம். ஆனால், வெளிநாட்டார், நம்மைப்போல இதனை, தள்ளியாவிடுவார்கள்? விலா நோகச் சிரிப்பார்களே! உண்மையில் பண்டிதரிடம், படபடப்பில்லாத தன்மையும், ஆசிய ஜோதியாக வேண்டுமெனும் ஆசையும் இல்லாமலிருந்திருந்தால், 'இந்த விபத்து', வந்தேயிருக்காது. பக்கத்து நாடு, பாகிஸ்தானை, போட்டிக் குரியதாககருதாமல், காஷ்மீரம் போன்ற பிரச்னைகளில், ஒத்துப் போயிருந்தால் இந்தக் கலக்கமெல்லா ஏற்படவழியிருந்திருக்காது? முன் போர் முறை மாண்ட மாவீரர் லியாகத் அலிகான் சொன்னார், "இருபத்தைந்து ஆண்டுகாலத்துக்கு, இந்தியாவும் பாகிஸ்தானும், சமாதான ஒப்பந்தம் ஒன்றை வரையறுத்துக் கொள்வோம்", என்பதாக. அங்ஙனம், ஒரு ஒப்பந்தத்தைத் தீட்டி, இரு நாடுகளும் செய்து கொண்டிருந்திருந்தால், இன்று பாகிஸ்தானைப் பார்த்தும் கலங்கவேண்டியதில்லை! அமெரிக்காவின் கலில்போய் விழ வேண்டியதுமில்லை!!

அதையெல்லாம் செய்யத் தெரியாது—அல்ல, அல்ல — கூடாது எனும் கருத்தோடு—இருந்ததோடு, அமெரிக்காவிடமும் கைநீட்டி, நீட்டி, 'கடனை' வாங்கிக் கொட்டிக் கொண்டிருந்தால், இதுபோல, பற்பல ஏற்படத்தான் செய்யும். அதன், அத்தாட்சிதான், பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டிருப்பதாகக் கூறும் ஒப்பந்தம்.

இந்த விபத்தை வளர்த்ததற்கு, 'திறமையான ராஜதந்திரம்,' எனப் பெயராம். செப்புகிறார், விஜயலட்சுமி! அதோடு, ஆபத்துக்குக் காரணமான, அமெரிக்காவையும் புகழ்கிறார்!!

இந்த 'அதிவிவேகி'களின் போக்கைக் காணும்போது, இத்தகையவர்கள் கையிலா, இன்பத் திராவிடம் சிக்கியிருப்பது?-எனும், வேதனையே உருவாகிறது. தமது திறமைக் குறைவாலும், பழிவாங்கும் மனப்பான்மையாலும், நம்மையுமன்றோ நாசபுரிக்கு அழைத்துச் செல்லுகின்றனர். இந்த சிக்கலிலிருந்து என்று மீள்வோமோ! வாழ்வோமோ!!

✲

வேண்டாதவைகள்!

"தெற்கைப்பற்றி எதுவுமே பேசுவதில்லை!" — என்று குறிப்பிட்டு, 'மெயில்' இதழ் தீட்டியிருக்கிறது.

தென்னாட்டிலிருந்து சென்ற பார்லிமெண்டு உறுப்பினர்களைப் பற்றித்தான், அவ்வண்ணம் எழுதியிருக்கிறது.

நாமும் பார்த்து வருகிறோம்— இவர்களில் பலரது குரல், ஒலிப்பதே கிடையாது! தெற்கின் சார்பாக, டில்லி பார்லிமெண்டில், பற்பலர் அங்கம் வகிக்கின்றனர்—தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் தோழர் காமராஜர்கூட ஒரு பார்லிமெண்டு உறுப்பினர்தான். அவர், பார்லிமெண்டில் எழுந்தாரா, பேசினாரா என்பதைவிட, 'போகிறாரா?' என்பதே பெரிய புதிராக இருக்கிறது! ஏனெனில், பார்லிமெண்டில், எத்தனைய விஷயம் நடைபெற்றாலும் சரி—அவர், இங்குதானிருக்கிறார். இப்போதுகூட, இதோ! திருவாங்கூர் செல்லப்போகிறார்' எனச் செய்திகள் கூறுகின்றன.

அவர்மட்டுமின்றி, அவரது கட்சியைச் சார்ந்த பலர் போயிருக்கிறார்கள். அவர்களாவது தெற்கைப்பற்றிப் பேசுகிறார்களா என்றால், இல்லை. நேருவின் முகவிலாசம்— டில்லி மாளிகையின் விருந்துபசாரம்—ஆகியவைகளில் மயங்கிக் கிடக்கின்றனர்.

ஆளும் கட்சியாம் காங்கிரசின் உறுப்பினர்கள் நிலை, இது! எதிர்க் கட்சி பார்லிமெண்டு உறுப்பினர்களோ, எதுவும் பேசமுடிவதில்லை— ஏனெனில், நூற்றுக்கணக்கானோர் கூடிக் கிடக்கும் அங்கே, ஒவ்வொருவரும் தத்தமது கருத்துக்களை எடுத்துக் கூறவும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. சரியான எதிர்க் கட்சியில்லை! அதோடு, காங்கிரஸ் கட்சி, பலத்த மெஜாரிடியுடனிருக்கிறது!! அதனால், எதிர்க்கட்சியினரின் எண்ணங்களும், அங்கு ஒலிக்க முடிவதில்லை. இவர்களும் போகிறார்கள்! உட்கார்ந்திருக்கிறார்கள்! திரும்புகிறார்கள்!

(11-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரி லீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!

திராவிடநாடு

காஞ்சி] 27—12—53 [ஞாயிறு

தொடர்கிறது! தொடர்கிறது!!

★

அந்தக் காரியம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!—யார் அது? எதிர்க்கட்சிக்காரனா! விடாதே, பிடி—எதிர்த்துப் பேசுகிறானா? எனில் தாமதம் கொண்டுவா, இங்கே—குற்றம் ஒன்றும் சாட்டமுடியாதா? பரவாயில்லை அதற்கும் சட்டம் தருகிறேன். அடை, சிறைக்குள்—என்று விடாமல், நடைபெற்றுக்கொண்டிருக்கிறது!!

மவுண்ட்பேட்டன் துரை மகனாரின் கையிலிருந்து, ஆட்சி அதிகாரம் மாறிய நாள் முதலாய், மற்றெந்தக் காரியம் நடந்தாலும், நடைபெறாவிட்டாலும், இதுமட்டும் சரிவர, நடைபெற்று வருகிறது! இதனால், சிந்தப்பட்ட கண்ணீர், ஏராளம். ஒடிக்கப்பட்ட, இளம்தம்பதிகளின் வாழ்க்கை, ஆயிரக்கணக்கிலுண்டு. அறுந்த தாலிகள்! இழந்த உயிர்கள் கூண்டில் சிக்கிய உடல்கள்! குருதிக் குளத்தில் மிதந்தோர்!—பலப்பலர். ஆனாலும், அதனை, விடவில்லை, அகிம்சையின் வழிவந்த அரசாங்க பீடத்தினர். 'அதுவே சொர்க்கம்! இன்ப வாழ்வைத் தரும், சுக மாளிகை!!' என்ற எண்ணத்தோடு, இடைவிடாது, சட்டமாக்கிக் கொண்டிருக்கின்றனர். அந்தச் சட்டம், அவர்களுக்கு ஓர் விளையாட்டு பொம்மையைப்போல இருக்கிறது. அது இருந்தால்தான், அரசாங்க பீடத்திலமர்ந்தபடி, தங்கள் காரியங்களைக் கவனிக்கமுடியும் என்று கருதுகின்றனர். இதனை நிறைவேற்றுவதில் மோதிலால்நேருவின் புதல்வர், மனிதகுல மாணிக்கம், முதல்வராய் நிற்கிறார்! அவருக்கு ஒத்தூத, ஒருபோது வெள்ளைக்காரன் வீசிய சட்ட அம்புகளுக்கெல்லாம் மார்பு காட்டி நின்றோர், இன்று தயாராக நிற்கின்றார்கள். கட்சியின் கண்ணியம் பறிபோகிறது!—கவலையில்லை. உங்கள் பெருமைக்கு மாசு படிகிறது!—பயப்படவில்லை. அக்கிரமமான சட்டம்! —யார், நீ, இதைக்கூற? அடுக்காது இது! – எங்கட்குத் தெரியும்–இவ்விதம் வேண்டுமென்றே வீசப்படுவதற்கு தயாரிக்கப்படுகிறது! தான் பவனி வந்தால் தன்னை யாராவது தாக்கிடுவரோவெனும் பயத்தில், கவசமோட்டாரில் பவனி வருவானும், ஹிட்லர். அதேபோல, இவர்களும், தமது ஆட்சிக்குக் கேடு வந்துவிடுமோவெனும் பயத்தோடு, இந்தச் சட்டத்தைக் 'கவசமாக'க் கருதிக் கிடக்கின்றனர். காலமாற்றத்தைச் சுட்டிக் காட்டினாலும், உலகம் கேலி செய்யுமென அறிவுரை புகன்றாலும், அத்தனையும் அலட்சியம் செய்தபடி, அடிக்கடி, அந்தச் சட்டத்தைப் புதுப்பித்துக் கொள்ளுகின்றனர் — கசாப்புக் கடைக்காரன் அடிக்கடி, தன்னுடைய வெட்டரிவாளை, தீட்டிக் கொள்வதுபோல.

இந்த விபரீதமான போக்கை முன்னாள் காங்கிரஸ் தலைவராம் ஆச்சாரிய கிருபளானி, டில்லிப் பார்லிமெண்டில், நெஞ்சுருக எடுத்துச் சொன்னார்—நெருப்புப்பொறி பறக்கக் கண்டித்தார்.

"நாற்பது ஆண்டுகளுக்குமேல் நான் காங்கிரசுக்கு உழைத்திருக்கிறேன். என்னைப் போன்றோர் உழைத்துக் கட்டிய காங்கிரசை, ஏன் இப்படி அலங்கோலமாக்குகிறீர்கள்? ஜனநாயகத்துக்குவிரோதமான காரியங்களைச் செய்து, அதன் நல்லபெயரை, சீரழித்ததுபோதும். இனியும் வேண்டாம். நான் வேறு கட்சியிலிருந்தாலும்— வளர்த்த பாசத்தால், சொல்கிறேன்! கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்!!"—என்று கேட்டார். அவர் குரல், மதிக்கப்படவில்லை. அன்பர் கட்ஜூ—உள்நாட்டு மந்திரி—எப்படியும் அந்தச் சட்டம் தேவை, யென்று கூறிகொண்டு வந்திருக்கிறார்.

கெஞ்சிய கிருபளானி, சட்டத்தால் மாண்ட வீரரை நினைவூட்டினார்:- 'ஒருபோது உங்களைப்போல மந்திரியாகயிருந்தவர்—பிறகு, உங்களைப் பிடிக்காமல், எதிர்க்கட்சியிலிருந்தவர். இந்தச் சபையில், நீங்கள், மேற்படிச் சட்டத்தைக் கொண்டுவந்தபோதெல்லாம், சங்கநாதம் செய்தார், 'வேண்டாம்!வேண்டாம்!!' என்று. அந்த உத்தமன்—இந்தியாவின் புதல்வன்—தான் தடுத்த அதே சட்டத்தால், சிறையில் பூட்டப்பட்டு—சாகடிக்கப்பட்டார். அவர் இல்லை! அவர், செத்துவிட்டார்!! அவரைச் சாகடிக்கக் காரணமாயிருந்த இந்தச் சட்டம் வேண்டாம்" என்று காஷ்மீரத்தில் இறந்துபோன வங்க வீரர் டாக்டர் சியாமபிரசாத்முகர்ஜியைக் குறிப்பிட்டுச் சொன்னார். கேளாக்காதினராயினர், நேருவின் சகாக்கள்! 'சட்டம் தேவை'—யென்றார், கட்ஜூ. உலக நீதிமன்றத்தில் வீற்றிருக்கும் பெருமை பெற்ற ஒருவரை—அவர் காங்கிரஸில் நின்றதால் — தோற்கடித்து வங்கத்தில் வெற்றி மாலை சூடிய, சாதன்குப்தா எனும் தோழர்—கண்ணிழந்தவர்–தட்டுத்தடுமாறி எழுந்து நின்று, வேண்டினார். விளக்குங்கள், தந்தார் — விபரீதமானதென்றுரைத்தார் — விவேகமல்ல, என்றார். ஏற்கவில்லை, கட்ஜூ. அவசியமானது என்று, சட்டத்தைக் கொண்டுவர முயலுகிறார்!

"இந்தச் சட்டம், இப்போது அவசியமா?"

"ஆமாம்! இல்லையென்றால், அராஜகம், ஏற்படக்கூடும்"

"கம்யூனிஸ்டுகளுக்காகத்தானே, இந்தச் சட்டத்தைச் செய்வதாகச் சொன்னீர்கள். இப்போது கம்யூனிஸ்டுகள்தான், அந்த முறை

களைக் கைவிட்டு விட்டார்களே. பிறகும், ஏன்?”

“மிகவும் தேவை. இல்லையென்ருல், நம்முடைய சுதந்திரத்துக்குத் தீங்குவரும்”

இவ்விதம், பதிலளிக்கப்பட்டு, மீண்டும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கண்டிக்காதோர், இல்லை! இதனுல், தண்டிக்கப்படாத காங்கிரசல்லாதோர் கொஞ்சம்!! இஷ்டம்போல் வீசி—எப்போது வேண்டுமானுலும்—யாரை வேண்டுமானுலும் — எந்தக் காரணமும் கூருமல்—பிடித்தடைக்கக் கூடிய சட்டம். பாதுகாப்புச் சட்டமாம், இதன் பெயர்! யாரைப் பாதுகாக்க?—இந்நாட்டு ஏழை மக்களின் வாயிலும் வயிற்றிலுமடித்து; அவர்கள் ஏனென்று கேட்டால், வாயையும் காலையும் பூட்டி சிறைக்குள் தள்ளி, அதற்குக் காரணமான ஆட்சிபீடமேறிகள், 'பாதுகாப்போடு' தம் தர்பாரை நடாத்த வழி செய்யும் சட்டம்! இதனை, இப்போதும், கொண்டுவந்திருக்கிருர், கட்ஜு. 'ஏன்' என்று கேட்டு, 'இன்னுமா அராஜகம் நடக்கிறது?' என்ருல், லக்ஷ்மணபுரியில் நடைபெற்ற மாணவர்களின் கிளர்ச்சியையும், கல்கத்தாவில் நடைபெற்ற டிராம்வே கட்டண உயர்வு எதிர்ப்போர் கிளர்ச்சியையும் ஆதாரத்துக்கு அழைக்கிருர் உள்ளமி அன்பர் கட்ஜு, சொல்லவேண்டார். லக்ஷ்மணபுரியிலும், கல்கத்தாவிலும், அத்துமீறிய காரியங்கள் நிகழ்ந்தன. ஆனுல், அதனை பாதுகாப்புச் சட்டமெனும் 'தந்திரவலையாலா' அரசாங்கம் அடக்கிற்று? சுந்தரமான மாணவன் — இளம் உயிர் — அரசாங்கத்தின் துப்பாக்கிக்கு இரையானுன்! ஏராளமான இளம் பிஞ்சுகள், காலொடிந்தும் கையொடிந்தும், மண்டை சிதறியும், வீழ்த்தப்பட்டார்கள். கல்கத்தாவிலும், எத்தனை உயிர்கள், பலியாயின! எவ்வளவுபேர், காயமடைந்தனர்!! இதையெல்லாம், இந்தப் பாதுகாப்புச் சட்டமிருந்தபோதும், செய்யத்தானே செய்தார்கள், காங்கிரஸ் ஆட்சியினர். இவ்வழிதானே, மக்களின் குரலை அடக்கும் சிறந்த வழியெனவும் எண்ணுகின்றனர். இந்தளவுக்கு இரத்தக்களரி ஏற்பட்டால் தடுக்க, காந்தியின் வழிவந்ததாகக் கூறும் கட்ஜுக்களுக்கு, தெரியாதா? அவர்களோடு இருந்தவர்தானே, ஆச்சாரிய கிருபளானி. அவர் கூறுகிருரே, வழி—“மக்கள் மத்தியிலிருக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களை மதிக்கவும்—அவர்களோடு கலந்து பேசவும் — ஜனநாயக முறையில் நடக்கும் சர்க்கார் தயாராயிருக்கவேண்டும். அப்படிச் செய்தால், ஏனிது போலுற கிளர்ச்சிகள், உருவெடுக்கின்றன?” மக்கள் குமுறல் கிளம்பினுல், அதனை அறிய, முயன்றதுண்டா, கட்ஜுக்கள்! மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினுல், காஷ்மீரில் சலவை செய்த ஆடைகள்

பொங்கல் புது நாளில்
கைத்தறி
ஆடைகளையே
அணிவோம்!

நலுங்கிடுமோ, என்றன்ருே, ஓடுகின்றனர்! அந்த நற்பண்பு இருந்தால், நாட்டில், 'கல்லக்குடி'யும் 'தூத்துக்குடி'யும் 'தியாகராய நகருமா', ஏற்படும்! மனிதர்களின் உயிரும் உடலும், சித்ரவதைக்குள்ளாகுமா? அந்தப்பண்பு, எங்கேயிருக்கிறது? ஆச்சாரியகிருபளானி, கூறுகிருர்! ஆனுல் அவரோடு பழகிய சகா, பண்டிதநேரு, என்ன சொல்லுகிருர். தன்னைப் போற்றித் துதிக்கும் மக்களைச் சுட்டுத்தள்ளவும்— பிடித்தடைக்கவும்— முயலுகிருர். தான், யாருமைய தலைவன் என்று சொல்லியவாறு, அகில உலக அரங்கில் ஆட்டம் போடுகிருரோ அந்த மனிதனை— இந்தப் பூமிக்குச் சொந்தக்காரனை— என்னென்ன செய்கிருர்! எப்படியெப்படி வதைக்கிருர், அதிகாரக் குரலுடன்!!

ஆட்சி பீடமேறி விட்டாலே, அந்தப் போதையில், மக்களுக்கும் அரசாங்கத்துக்குமுள்ள தூரத்தை சர்வாதிகாரிகள் கொஞ்சங்கொஞ்சமாக விரிவாக்கிக் கொண்டு விடுவாராம். சர்வாதிகாரிகளைக் காட்டிலும் பெரிய சர்வாதிகாரியாக— கிருபளானி, கூறியதுபோல்—விளங்கும் நேருபண்டிதரின், நிலை என்ன! இன்று, அவர், மக்கள் தலைவரா? 'ஆம்' எனில், இவ்வண்ணம் பேசுவாரா! அண்மையில் கல்கத்தா சென்றிருந்தபோது, அங்கு நடைபெற்ற மக்கள் கிளர்ச்சியைப் பார்த்துச் செப்பினுராம்:—‘கல்கத்தாவில் வாழும் முப்பது லட்சம் ஜனங்களே! உங்களைக் காண, மிகவும் வியப்படைகிறேன். ஆயிரக்கணக்கான ஒரு சிலரின் கோஷத்தைய', நீங்கள் அனுமதிப்பது— அவர்கள் அத்துமீறிய வகைகளில் ஈடுபட்டபோது, விட்டுவைப்பது? அவர்களைக் கண்டு பயப்படலாமா, நீங்கள்!”— பண்டிதர் பகர்ந்தது. இது சில ஆயிரம் பேர், ஏதோ ஒரு காரியத்திலீடுபட்டனராம்! அவர்களைக் கண்டு 30 லட்சம் மக்களாகிய நீங்களேன், பயந்தீர்கள்?— என்று கேட்கிருர், பண்டிதர். சில ஆயிரம் பேராம், கிளர்ச்சி செய்தவர்கள்! இருக்கட்டும். ஆனுல் அந்த ஆயிரம் பேரின் பின்னுல், நிற்போர் யார்? அவர் குறிப்பிடும் லட்சக் கணக்கான மக்கள் தானே! மக்களுக்குப் பிடிக்கவில்லையென்ருல், இந்தச் சில ஆயிரம் பேரும் உயிரினும் மக்கள் வாழ்வு பெரிதெனும் உன்னத மொழியினை உள்ளத்தில் தாங்குவரா? ஆட்சியின் அக்கிரமத்தைக் கண்டிக்க முனைவரா! இந்த, 'அரிச்சுவடி'யை, மறக்கிருர், பண்டிதர்!! அதிகார போதை— அய்யகோ— என்னே அதிசயம். எத்தனை பெரிய தேசிய வீரர், இந்த நேரு. இன்று, அவரை என்னென்ன பேசச் சொல்கிறது, இந்த ஆட்சி அதிகாரம்! ஒரு சில ஆயிரமாம்—எவ்வளவு அலட்சியம்; தொக்கி நிற்கிறது அதில். எங்கே பெற்ருர், இந்த 'அமெரி'யின் குரலை?, சர்ச்சில், சமீபத்தில், தன்னுடைய பார்லிமெண்டில் அட்லி,

'குற்றம் சுமத்தியபோது,' 'உண்மையானல், ஆராய்கிறேன். உங்களையும் சேர்த்துக் கொண்டு', என்ருராம். ஆனல், நேரு, இங்கே அதிகாரக் குரலெழுப்புகிருர்! இதுவா, வழி? இவ்வழி செல்வதை விட, அதிருப்தி யடைந்தோரை அழைத்து விவாதித்தால், போராட்டங்கள் ஏன், முகிழ்கின்றன? இந்தப் பொல்லாத சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் தான், என்ன!

வேண்டாதோர் கையிலெல்லாம் விலங்கு பூட்டக்கூடிய இந்தச் சட்டத்தை, மீண்டும் பார்லிமெண்டில் கொண்டுவந்திருக்கிற டில்லிபீடம் மற்ருேர் சட்டத் திருத்தத்தையும் பிரசுரம் செய்துள்ளது. கிரிமினல் சட்டத்தில் சில திருத்தங்கள் தேவையென அந்த மசோதா பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில், ஒரு திருத்தம்: அரசாங்க ஊழியர்கள்பற்றி மிக அவதூருகவும், ஆபாசமாகவும், பேசுவதையும், எழுதுவதையும் தடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதுபோன்ற வழக்குகளில் போலீசார் தாமாகவே வழக்குத் தொடரலாம். மந்திரிகள், ராஷ்டிரபதி, கவர்னர்கள், ராஜப்பிரமுகர்கள் முதலியோரும் இத்திருத்தப்படி அரசாங்க ஊழியர்களாகக் கருதப்படுவர்.''

இதுவும், ஒரு பாதுகாப்புச் சட்டம்தான்! தமது ஆட்சியைப்பற்றி, எவரும் பேசக்கூடாதாம் — எழுதவும் கூடாதாம். இந்தச் சட்டத்தை என்னவென்று சொல்வது!

யாரை வேண்டுமானலும் பிடித்து அடைக்க ஒரு சட்டம்.

குறை கூறுவோரைக் கூண்டிலேற்ற ஒரு சட்டம்.

மனித உரிமைகள் எனும் பெயரால், ஐக்கிய நாடுகள் சபையில் வி. கே. கிருஷ்ணமேனனும், விஜயலட்சுமியும், வீரஉரையாற்றிவிட்டுத் திரும்பியிருக்கிற நேரத்திலே, டில்லி எனும் அம்புருத்தூணியிலிருந்து, விசித்திரமான அம்புகள் பாய்ந்திருக்கின்றன! எவரும் இனிப் பேசவும் கூடாதாம் — எழுதவும் கூடாதாம். மந்திரிகள், மாதாமாதம் சம்பளம் பெற்று, மாந்தோப்பிலோ குளத்தங்கரையிலோ, இஷ்டம் போல் திரிந்தாலும், கவர்னர் என்பதை மறந்து ஏதாவது செய்தாலும், அதிகாரிகள் தம் ஆர்ப்பரிப்பால் தன்னிடம் வரும் மக்களை ஆட்டிப் படைத்தாலும், சகித்துக் கொண்டிருக்கவேண்டுமாம். 'சுயராஜ்யம்' சொல்லுகிறது! சுந்தரமான சட்டம் கொண்டுவந்திருக்கிறது!! 'எண்ண — பேச — எழுத' சுதந்திரம் உண்டென்று அரசியலமைப்பில் எழுதியிருக்கும், அரசாங்கம் சொல்கிறது!! சட்டசபை நடக்கும் நேரத்தில், அமைச்சர்கள், அரசமரத்தடியில்போய் 'ஆருடம்' பார்த்தாலும்— அநியாயமான வழிகளில் மக்களை இம்சித்தாலும்—எது நேர்ந்தாலும், வாய் மூடி மௌனியாகி, உலவவேண்டுமாம்! தனக்குத் தீங்கு செய்யவரும், கழுகை எதிர்த்து, கிளிகூட 'கீச்-கீச்' என்று கத்துகிறது. பசித்தால், இளம் கன்று, 'அம்மா!' என்று கதறியவாறு, தடைகள் எத்தனையிருந்தாலும், தாவியோடுகிறது! இந்த வாயில்லா ஜீவன்கள் அனுபவிக்கும் உரிமைகூட, ஆறறிவு படைத்த மனிதனுக்கு இல்லையாம். குறை கூறினல், வழக்காம்! அரசாங்கத்தை எதிர்த்துப் பேசினல் சிறையாம்! பாதுகாப்புச் சட்டமாம்—கிரிமினல் திருத்தச் சட்டமாம். காந்தியாரின் சீடர்களிடமிருந்து, சுயராஜ்ய பூமிக்குக் கிடைக்கிறது! டில்லிபீடம் வழங்குகிறது!! தேசீயத்தோழர்களே, இதற்கா நீங்கள் இவ்வளவு பாடுபட்டீர்? குமரனையும், சிதம்பரனரையும் இழந்தீர்?

★

ஆபத்தான வியாதி

ஆடு நினைகிறதே யென்று எனவோ, அங்கலாய்த்ததாமே! அந்தக்கதையைப்போல், சட்டசபையில் அரும்பியிருக்கும் திராவிடப் பார்லிமெண்டு கட்சியைப்பற்றி, சிலர் 'ஜோசியம்' கூற முனைந்துள்ளனர். அவர்களின் போக்கையும், கூற்றையும், கவனிக்கும்போது விந்தையாயிருக்கிறது! ''திராவிட முன்னேற்ற கழகம்—அந்த சட்டசபையை அங்கீகரிக்காது'' என்ருேர் செய்தி, ''திராவிடப் பார்லிமெண்டரி கட்சியிலிருப்போர் பணக்காரர்கள்'' என்ருேர் சித்திரம்—இவ்வண்ணம் சித்தம்போன போக்கில், ஏதோ, கூறிவருகின்றனர். இந்தக்குறுமதி, யாருக்குஏற்படவேண்டுமோ; அவர்களுக்கேற்படாமல், வேறுயாராருக்கோ உண்டாவதை எண்ணும்போது, விந்தையாயிருக்கிறது! 'ஆரியமாவது! திராவிடமாவது!!?' என்று சென்ற இடமெல்லாம், சிந்துபாடினர், ஆச்சாரியார். ஆனல் அவர் அடுத்தமுறை சட்டசபைக்குள் நுழையும்போது, அங்கே 'திராவிடம்' எனும் சொல்லேந்தி, தனக்கு எதிரில் அமர்ந்திருக்கக்கண்டார். இந்தகாட்சி, அவருள்ளத்தை, ரம்பங் கொண்டறுப்பது போலச் செய்திருக்கும். ஏனெனில், கடந்த சட்டசபைக் கூட்டத்துக்குப் பின்பு நாட்டில் அவர் ஆடிய நடனங்கள் கொஞ்சநஞ்சமல்ல! 'ஒழிப்பேன்'—'கணக்கைத் தீர்த்துக்கட்டுவேன்'—'சரியானபடி பார்த்துக்கொள்ளுங்கள்'—இப்படியெல்லாம், எங்கு சென்ருலும், கொக்கரித்தார். எறும்பென்ருர்! துரும்பாக மதிப்பேனென்பார்!! ஆனல், சட்டசபையில், 'எறும்பும் துரும்பும்' கண்ணை உறுத்துகிற அளவுக்கு, இப்போது அமர்ந்திருக்கிறது. ஆச்சாரியாரை, கேள்விகள் கேட்கிறது—எதுவும், செய்யமுடியாமல், எல்லாவற்றிற்கும், பதில் சொல்லுகிருர்! திமிரில்லை—கிண்டலில்லை— 'கவனிக்கிறேன்?—உண்மைதான்'? எனும் வார்த்தைகள், வருகின்றன.

ஓங்காரக் கூச்சலிட்டவர், வேலியோரத்து ஓணானைப்போல் நடந்துகொள்ளும்போது, ஒரு சிலர், 'திராவிடப்பார்லிமெண்டு' கட்சியைக்கண்டு, உள்ள எரிச்சல் கொண்டால், என்னவென்று கூறுவது! அதிலும் ஒரு கட்சியுமில்லாதோருக்கு, இந்த எரிச்சலென்றுல், இந்த வேதனையை, எப்படியெடுத்துரைப்பது. திராவிடப் பார்லிமெண்டு கட்சியைப் பற்றிக் கூறுமுன், அதன் நடவடிக்கைகள் எப்படியிருக்கிறதென்பதை, சில நாட்களாவது கவனிக்கவேண்டும். பண்டிதநேருவைத் தலைவரென யேற்று—ஆச்சாரியாரை அத்யந்த குருவெனப்போற்றி— 'மூவர்ணக் கொடிக்கு, ஜே!', என்று, முழக்கமிடும், திராவிடப் பார்லிமெண்டு கட்சி!-'முத்தண்ணுக்களும்', கூறுர்.

அதுபோல, நாட்டின் நலிவுகளை எடுத்துக்காட்டாமல், கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று, இருந்துவிடும். அதில் கையெழுத்திட்டிருப்போரின் பெயர்களை, பார்த்தால் போதும். பலர் ஐக்கிய முன்னணியிலிருந்த போதே, ஜொலித்தவர்கள். அறிவும்திறமையுமிக்கவர்கள். அவர்களைப் பார்த்து, 'ஜமீன்தார்கள்' என்கிறதாம்—ஏடுகள். கேட்டோர், சிரிப்பர்! கையெழுத்திட்டிருப்போரில், பலர், ஜமீன்தார்களாம்? ஐக்கிய முன்னணியில் 'படுகொலை' செய்த பிரகாசத்துக்குப் பின்னணி கீதம் பாடியோரா, இவ்வண்ணம் பேசுவது! காய்ச்சல், அதிகமானால், வார்த்தைகள் குளறுமாம். அரசியலில், இந்தக் காய்ச்சல், ஆபத்தான வியாதி. அன்பர்கள், அறிய வேண்டும்.

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 'அழகு'க்கு அந்தப் பார்லிமெண்டு ஏன்? ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் வெற்றிபெற்றுப்போனவர்கள் அந்தந்த தொகுதிகளைப்பற்றிப் பேசவேண்டும்—வாதாடவேண்டும் – வசதிகளைப் பெறவேண்டும். ஆனால், யாரும் தமது தொகுதிகளைப்பற்றிப் பேசுவது கிடையாது. அதற்குப் பதில், இந்தியா முழுமைக்கும் வக்கீல்களாகி, ரஷ்யாவுக்கும் - இந்தியாவுக்குமிடையேயுள்ள நட்பு, டாலருக்கும் - ரூபிளுக்கும் உள்ள சண்டைகுறித்துப் பேசுகிறார்கள். 'ஏனய்யா? உமது தொகுதியைப்பற்றிப் பேசக்கூடாதா?' என்றால், தனியாக அதைப்பற்றி மட்டும் பேசவேண்டுமா என்ன! எல்லாவற்றையும் சேர்த்துத்தான் நாங்கள் பேசுகிறோம்—தனித் தனியாகப் பேசமுடியுமா என்று கேட்கிறார்கள். இத்தகைய நிலையில், ஏதோ-போவது, இருப்பது - வருவது என்றிருக்கும் பார்லிமெண்டு உறுப்பினர்களைப்பற்றி, பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையைப்பற்றி யறிந்த 'மெயில்' பரிதாபப்படத்தான் செய்யும்! ஆனால், இதெல்லாம், 'அவர்கள்' காதில் ஏறவேண்டுமே!!

*

பார்லிமெண்டால், எவ்வண்ணம், நமக்கு நன்மைகள் மலரவில்லையோ—அதே போல, மற்றோர் சபையும், இருந்து கொண்டிருக்கிறது. மாலை நேரத்தில் கடற்காற்று வாங்கச் செல்வோர், பல விஷயங்கள் குறித்துப் பேசிவிட்டுப் பிறகு கலைந்து செல்வார்களல்லவா, அதைப்போல, ஒரு சபை! அதன் பெயர் மேல்சபை. ஒவ்வொரு மாகாணத்திலுமிருக்கிறது. வருகிறது. இந்தப் 'பொம்மைச் சபையைப் பற்றி, அண்மையில், பம்பாய் சட்டசபையினர் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர். பம்பாய் சட்டசபையென்றால், முழுவதும் காங்கிரஸ்காரர்களுடைய சபையெனப் பொருள். அவர்கள், ஒரு தீர்மானம் அனுப்பியிருக்கிறார்கள். "உடனடியாக இந்த மேல் சபைகளையெல்லாம் ஒழித்து உத்திரவு பிறப்பிக்கும் வகையில் அரசியலமைப்பைத் திருத்தவேண்டும்"—என்பதே, அத்தீர்மானம். பம்பாய் முதலமைச்சர் தலையீட்டின் பேரில், சிறுதிருத்தமொன்று சேர்த்துக் கொள்ளப்பட்டது. அது, 'தற்போதிருக்கும் சட்டசபைக் கலைந்து மறுதேர்தல் வரும்போது', என்பதாகும். கெஞ்சிக் கேட்டு இந்த திருத்தத்தைப் பெற்றிருக்கிறது! ஏனெனில் இந்திய அரசியலமைப்புப்படி, ஏதாவதுஒரு சட்டசபை பெருத்த மெஜாரிடியுடன் ஒரு முடிவைச் செய்தால், அதையேற்று அரசியலமைப்பில் திருத்தம் செய்யவேண்டும்! அதன்படி 'ஒரிஜினல்' தீர்மானம் நிறைவேறினால், உடனடியாக பார்லிமெண்டு சட்டம் செய்து, மேல் சபைகளை ரத்து செய்யவேண்டும். பம்பாய்க்குச் செய்தால், ஏனைய இடங்களிலும், 'அத்தீ', பரவுமே! அதனால், 'அடுத்தத் தேர்தல் வரும் வரையில்', என்பது சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அனாவசியமாக — வீணாடம்பரத்துக்காக— இப்படியொருசபையேன் இருக்கவேண்டும்! இதன் வழியாக விரும்பத்தகாத 'விஷங்கள்' புகுந்து, நாட்டையாளப் புறப்படவேண்டும்!!

*

விரும்பத்தகாதவைகளின் 'ரகத்தில்' குறிப்பிட வேண்டிய மற்றொன்று, 'கவர்னர்' பதவியாகும், இதைப்பற்றி மைசூரில் டிச/1-ந் தேதி பேசிய தோழர் கிருபளானி, "ஜனநாயகத்தில் மிகமிக அவலமான விஷயம்—இவ்விதம் கவர்னர்களிருப்பது" எனக் குறிப்பிட்டு, அந்தப் பொறுப்பை யேற்பதால், யாரும், எதையும் செய்துவிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். "சுதந்திரமாக உலவ முடியாது—ஏதாவது பேசவிரும்பினால், முதலிலேயே முதலமைச்சரிடம் காட்டவேண்டும்—அவருக்குள்ள வேலை, பள்ளிக்கூடம், சினிமாக் கொட்டகை, ஓட்டல், மிட்டாய்க்கடை முதலியவைகளைத் திறப்பது!" என்றும் கிருபளானி, கூறியிருக்கிறார். கிருபளானி, வந்த கவர்னர் பதவியை, உதறித் தள்ளியவர்! இதோ, கவர்னர் பதவியிலிருக்கும் பிரகாசா நவ 9-ல் நாகபுரியில், கவர்னர் பதவி குறித்து, கூறியதைத் தருகிறோம். "கவர்னர்களைப்பற்றி எவரும் இலட்சியம் செய்வதில்லை. பிரிட்டிஷார் காலத்திலாவது அப்போதிருந்த கவர்னர்கள் எதையும் அதிகாரத்தோடு சொல்ல முடிந்தது. இப்போது, இந்தப் பரிதாபத்துக்குரிய கவர்னர்களால், என்ன செய்ய இருக்கிறது!" என்று வேதனையோடு கூறியுள்ளார். இப்படிப்பட்ட கவர்னர் பதவி மாகாணம் ஒவ்வொன்றுக்கும் ஏன்? அதற்கென லட்சக்கணக்கில் பணம் கொட்டியளக்கப்படுவதேன்!!

★

கரந்தை கவியரசு மறைவு

கரந்தைக் கவியரசு—தமிழ்ப் பேரறிஞர் வேங்கடாசலனார் அவர்கள் அண்மையில், இயற்கை யெய்திய செய்தி கேட்டு, மிகவும் வருந்தினோம். கவியரசு அவர்களின் மறைவு, தமிழுலகிற்கு, ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். அவரது நண்பர்களுக்கும், மாணவர்கட்கும், குடும்பத்தாருக்கும் நம்முடைய மனமார்ந்த ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர்கள் நிலை

"பேர்மூடாவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றைப் படித்தேன். அங்குள்ள பிரமுகர்களில் ஒருவர்—அட்டர்னி ஜனரல் என நினைக்கிறேன்—ஓட்டலுக்குள் நுழையமுடியாதவாறு மறுக்கப்பட்டதாம். அவர் நுழைந்தால், அந்த ஓட்டலுக்கு, உல்லாசயாத்திரிகர்கள் வராமல் போவார் எனக் கூறப்பட்டதாம். இந்த நிலைமையில், அமெரிக்கரின் போக்கு இருக்கிறது! அவ்வளவு தூரம் இனவேற்றுமை காட்டப்படுகிறது," என்று சிந்தை நொந்து டில்லி பார்லிமெண்டில், பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார். பேர்மூடாவில் நடைபெற்ற சம்பவம், அவர் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது! அதேபோல, ஆப்ரிக்க நிறவெறிப் பிரச்னை — நீக்ரோக்கள் நிலைமை—முதலியவைகளைப் பற்றி, இங்கிருந்தபடி, எக்காளம் எழுப்பும் பண்டிதரின் சகாக்கள் பலர், இங்குமிருக்கிறார்கள்! அவர்களிலே ஒருவரான, அன்பர் ஆச்சாரியார், சென்னை சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறார், "இப்போது, அநேகமாகத் தீண்டாமை ஒழிந்து விட்டது," என்பதாக. தீண்டாமை ஒழிந்து விட்டதாம்! அவர், கூறுகிறார்!! மார்பில் சந்தனம் விளங்க, வாயில் வெற்றிலையைக் குழப்பிக்கொண்டு, கையில் விசிறியுடன், திண்ணைப்பேச்சிலீடுபடுவோர் சொல்வதுண்டு," ஜாதி—ஜாதீன்னு பேசறுளே! ஓய் — எங்கேயிருக்கு, ஜாதி? இப்போது? எங்கும்தான், அது கூடாதன்னு கூறுகிறவா, அதிகரித்துட்டாளே," என்று. அவ்விதம் கூறுவோர்களின் மார்பைத் தடவிப்பார்த்தால், முப்புரி நூல், கிடப்பது தெரியும்! இவ்விதம், 'ஜாதி போய்விட்டது,' என்று ஆலாபனம் செய்யும் உல்லாசிகளைப்போல் ஆச்சாரியாரும் கூறியிருக்கிறார். எங்கே போயிற்று, தீண்டாமை? கடந்தவாரம், சென்னை சட்டசபையில், ஒரு கேள்வி வந்தது. வடார்க்காட்டிலுள்ள ஒரு ஊரில் ஒரு ஆதித்திராவிடத் தோழருக்கு தேநீர் வழங்க மறுக்கப்பட்டதாம்—ஒரு ஓட்டலில். இதற்கு, ஏதோ, விளக்கம் தந்தார், அமைச்சர்! இதைப்போன்ற விளக்கம்தான் — பெர்மூடா ஓட்டல் காரரும் கூறியதாக—பண்டிதர் நேரு, குறிப்பிட்டிருக்கிறார்!! விளக்கமுரைப்பது, பெரிதல்ல. ஆனல், என்றோ ஏற்பட்ட இந்தக் கொடுமை, இன்னும் நீடிப்பதென்பதை எவரும் மறுக்கமுடியாது. இதனைப் பலரும், உணருகிறார்கள்—பேசுகிறார்கள் — நாலுபேரைச் சந்திக்கும் போது அனுதாபம் காட்டுகிறார்கள். பிறகு, மறந்துவிடுகிறார்கள். சட்டசபையில் பேசிய பல தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள், இந்தப் போக்கைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த 'அனுதாபம் காட்டு முறை' காங்கிரசில் ஒருபோது தேவைப்பட்டது—அதனை, காந்தியார் தன்னுடைய பிரச்னையாகக் கருதி வலியுறுத்தி வந்தார் ஆனல், இன்று! அந்த 'அனுதாபத்தால்,' அவர்கள் விழாவில், எவ்வித ஏற்றமும், ஏற்பட்டு விடவில்லை. கிராமங்களில் சென்று பார்த்தால், தாழ்த்தப்பட்டோர்களின் நிலை, விளங்கும்! சமுதாயத்தின் தூண்களான அவர்கள், சண்டாளர்களாய் — மதிப்பில்லாதவர்களாய்—உழலுகின்றனர். அவர்கள் வாழும், குடிசைகளுக்குச் செல்ல வேண்டுமானல், பாம்புகடி-தேள் கூட்டம்-நீர் நிலை-இத்தனையும் உண்டு. எங்கோ, ஓரிடத்தில்—ஒதுக்கப்பட்டவர்களாய், இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலைமை போக, வேதாகமத்தைப் படித்து விட்டால் போதாது! ஆண்டவன் பிறப்பில், பேதமேது?,' எனக் கீதம் பாடிவிட்டால் போதாது!! சமுதாயத்தில் படர்ந்து கிடக்கும் இந்த நச்சுக் கொடியைக் கிள்ளியெறிய வேண்டும். ஆனல், ஆச்சாரியாரோ, 'தீண்டாமை இப்போது அனேகமாகப் போய்விட்டது,' என்று செப்புகிறார். அவர் பழகுவது—சபைத் தலைவர் சிவசண்முகம்—ஊறுகாய் வியாபாரி வெங்கடாசலம் — அவர் மனைவி ஜோதியம்மை முதலியோராதலால், அவ்வண்ணம் செப்பியிருக்கிறார்.

ஆனல், இவர்களெல்லாம் மனதில், எண்ணியும் பார்க்கமுடியாத தொலைவில்— குப்பைமேடுகளில்— இந்த புனித மாணிக்கங்கள், கிடக்கிறார்கள். இவர்கள் தான், நாட்டிற்குவேண்டிய உணவைத்தரும், நல்லுடல் விவசாயிகள்! நிலத்தை உழுது, பயிரிட்டு, நாத்துநட்டு கதிரறுக்கும் கூட்டம், இவர்கள் தான். ஆனல், கவனிப்பாரின்றி, ஏழைகளாய், மோழைகளாய் கிடக்கிறார்கள். இவர்கள் பயிரிடும் நிலம், இவர்களுடையதாக இல்லை. இதனையும் சட்டசபையில் "தாழ்த்தப்பட்டோருக்குள்ள முக்கிய பிரச்னை அவர்களைத் தாக்கிவரும் வறுமை தான்", என்று அன்பர் ஆச்சாரியார் கூறியிருக்கிறார். ஆனல், அந்த வறுமையைப் போக்கும் வழிகளைப் பற்றி, எதுவும் கூறவில்லை—அந்தப் பாதையை விளக்க ஆரம்பித்தால், எங்கெங்கோபோய்விட நேருமே! அதனல், அதைப்பற்றி, எதுவும் கூறவில்லை. உண்மையில் உழைத்து நெளியும் அவர்களுக்கு வேண்டிய உரிமைகளையும், வசதிகளையும் தேடித்தரும் வரையில், 'அனுதாபம்' காட்டுவதும், 'ஐயோ!' என்று சொல்வதும், கண்துடைப்பு தான்.

❀

இப்படியும் நடக்கிறது!

வெட்கப்படுகிறோம். பயப்படுகிறோம்! சங்கடப்படுகிறோம்!—என்று பிரான்சில், நான்கு தினங்களாக நடைபெறும், குடியரசுத் தலைவர் தேர்தலைப்பற்றி, நிருபர்கள் அறிவிக்கின்றனர். அவ்வளவு குழப்பமாக நடைபெறுகிறதாம். இதனைக் காணும்போது பிரான்சின் எதிர்காலம், இருள் மிகுந்ததாகக் காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கிறார்கள், நிருபர்கள்.

✱

ஒருபோது தன் சுட்டுவிரலாட்டினல், ஓடோடிவர, எத்தனையோ பேர் காத்துக் கிடந்த கெய்ரோவில் எகிப்தின் முன்னாள் மன்னர், பரூக்கிற்கு, ஒரு வக்கீல், கிடைக்கவில்லையாம். அவருடைய இளம் மனைவியான நாரிமன் தொடர்ந்துள்ள விவாகரத்து வழக்கில் வாதாட, பரூக் சார்பில் சிரியாநாட்டு வக்கீல், ஒருவர் வந்தாராம். 'அந்நிய நாட்டு வக்கீல்களுக்கு எகிப்து நீதிமன்றத்தில் இடமில்லை' என்று எகிப்துவக்கீல்கள் சங்கம் கூறிவிடவே, அவர் ஒரு எகிப்து வக்கீலைத் தேடிக்கொண்டிருக்கிறாராம்.

அவா அறுத்தல்—ஒரு ஆராய்ச்சி

[அடிகள்]

★

மறு பிறப்பில் மாறாத நம்பிக்கை கொண்டுள்ளவர்கள், ஒருவன், இறந்தபின் இன்னொரு பிறவி எடுக்கிறான் என்றும், அதற்குக் காரணம் அவனிடம் இருக்கும் அவாவே என்றும் கூறுகிறார்கள்.

அவா—இது பொதுவாக எல்லா உயிர்களுக்கும் இயற்கையாகவே அமைந்த ஒன்றாகும்.

அவா—இது இல்லாத எந்த உயிரும் இல்லை — இருக்கமுடியாது — இருக்கக் கூடாது.

அவா—இது எல்லாருக்கும் இன்றியமையாது இருக்கவேண்டிய ஒன்றாகும்.

அவா—இது இல்லையானால் எந்த உயிரும் இயங்கமுடியாது.

அவா — இது இல்லையென்றால், உலகில் எந்தச் சம்பவங்களும் நடைபெறா.

மறுபிறப்பை நிலைநாட்ட முயல்கின்றவர்கள், இந்த அவாவை முதற் காரணமாக வைத்துத் தங்கள் வாதத்தை மெய்ப்பிக்கப் பார்ப்பது பரிகசிக்கத் தக்க ஒன்றாகும்.

திருவள்ளுவர் கருத்துப்படி அவாவே பிறப்புக்குக் காரணம் என்று வைத்துப் பார்த்தாலும் அவர் கூற்றும் பொருத்தமுள்ளதாகத் தெரியவில்லை. 'அவா' என்பது 'விருப்பம்' என்ற பொருளில் வருவதாகும். எனவே ஒருவனால் விரும்பப்பட்ட ஒன்று, அவனால் முடியவேண்டுமானால், அவ்விருப்பமே அவன் பிறப்பதற்குரிய வித்தாகி நின்று அவனுடைய எண்ணத்தை முடிக்கின்றதென்பது திருவள்ளுவரின் கருத்தாகும். ஆனால், நல்லவை கெட்டவை என்ற இரு வேறு செயல்களுக்கும் அவாவே காரணம் என்பது சொல்லாமலே பெறப்படும். திருவள்ளுவர், மக்கள் பிறவாமல் இருப்பதற்கு வழி சொல்லவந்த இடத்தில், அவா அறுத்தலைப் பற்றிப் பேசியுள்ளார். என்றால், ஒன்றை விரும்புதற்கும் வெறுத்தற்கும் காரணமான பகுத்துணர்வற்ற செடி, கொடி, மரம், புல், பூண்டு முதலானவைகளுக்கும் பிறப்பும் இறப்பும் உளதாகச் சொல்லப்படுகின்றது. ஒரு மரத்தில் கோடிக்கணக்கான வித்துக்கள் உண்டாகிப், பின் அவை எல்லாம் தனித்தனி மரமாகக் கோடிக்கணக்கான மரங்கள் உண்டாகின்றன ஆகையால், அந்த மரத்திற்குக் கோடிக்கணக்கான விருப்பங்கள் இருந்தனவென்பதா அதன் பொருள்? பிற உயிர்களைப்போல், அந்த மரமும் இன்னொரு மரத்தைப் பார்த்து ஆசைப்படுகின்றதா? மரம் வேறு, மக்கள் வேறு, என்றால், அது பொருந்தாது. எப்படியென்றால்; ஒரு உயிரே, அது செய்த வினைகட்கேற்பப் பல்வேறு வகைப்பட்ட பிறப்புக்களை எடுக்கின்றதென்பதும் கடவுள் நூலார் கொள்கையாகும்.

"புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப்
பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி
முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற
இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்
பிறந்து இளைத்தேன்"

என்று சைவ சமய குரவர் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகரும் கூறியுள்ளார். இதனால், ஒரு உயிரே பலவகைப்பட்ட பிறப்புக்களை எடுக்கின்றதென்ற கடவுள் நூலார் கொள்கை வலியுறுவதால், மரம் வேறு—மக்கள்வேறு என்று கூறி மறு பிறப்புண்மையை மட்டும் நிலைநாட்ட முயல்கின்ற இன்னொரு சாராரின் கொள்கையும் பொய்யாம் என்றுணர்க. உணரவே, திருவள்ளுவர் கூறும் 'அவா' பிறப்புக்குக் காரணம் என்பதும் மறுக்கப்படும்.

ஏனென்றால், நல்ல செயல்கள் செய்வதற்கும் அவாவே காரணமாய் நிற்பதால், பிறப்பை ஒழிப்பதற்கு நல்ல செயல்களுஞ் செய்யப்படாதென்பதே திருவள்ளுவர் கருத்தாகக் கூறப்படுகின்றது. இன்னா செய்யாமை—இல்வாழ்க்கை—ஊக்கமுடைமை—குடிசெயல்வகை—பொருள் செயல்வகை—குற்றங் கடிதல்—செய்ந்நன்றியறிதல்—புகழ்—விருந்தோம்பல்—உழவு—இறைமாட்சி—அறன் வலியுறுத்தல்—மெய்யுணர்தல் முதலான மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத நற்பண்புகளை வகுத்துதவிய திருவள்ளுவர், மக்களை ஒரு வேலையுமற்ற சோம்பேறிகளாக்கும் 'அவாவறுத்தல்' என்ற பொய்யுரையைப் பொய்யாமொழியாகிய திருக்குறளில் அமைத்திருப்பாரா? 'கடவுள் வாழ்த்து' 'நீத்தார் பெருமை' 'அவாவறுத்தல்' முதலான அதிகாரங்கள் எல்லாம், கடவுட் கொள்கையை நிலைநாட்டவந்த மதவெறி பிடித்த பிற்காலத்தவரால் எழுதிச் சேர்க்கப்பட்டவையாம் என்பது மறுக்கமுடியாத ஒரு உண்மையாகும்.

தமிழ் மறையாகிய திருக்குறளைப் பற்றியும் ஈண்டு குறிப்பிட நேர்ந்ததால், அதன் அமைப்பைப்பற்றியும் ஒரு சிறிது ஆராய்ந்து பார்ப்பது இன்றியமையாததாய் இருக்கிறது. திருக்குறளிற் காணப்படும் முதல் அதிகாரமான 'கடவுள் வாழ்த்து' அந்நூலின் பெருமையையே குறைத்து விட்டதென்று சொல்லலாம். ஏனென்றால், திருக்குறள், எச்சமயத்தையுந் தழுவாத ஒரு பொது நூலாகும் உலகிலுள்ள பல வகைப்பட்ட மக்களுக்கும் நடுநின்று அறிவு கொளுத்த எழுந்த ஒரு பொது நூலில், குறிப்பிட்ட ஒரு மதக் கடவுளைப்பற்றி வாழ்த்துக் கூறுவது அந்நூலுக்கு வேண்டற்பாலதன்று. உலகிற் காணப்படும் ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் சமயமே சிறந்ததென்றும், அதிற் பேசப்படுங் கடவுளே உயர்ந்தவர் என்றும் பேசி வழக்காடும் வழக்கம் நமது நாட்டில் மதம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை இருந்து வருகின்றது. இங்ஙனமாக மக்கள் அனைவர்க்கும் பொதுவகையால் அறிவை விளக்க வந்த திருவள்ளுவர், ஒரு குறிப்பிட்ட மதக்கடவுளுக்கு வாழ்த்துக்கூறி அவருக்கு உயர்வு கொடுத்தார் என்றால், அது

எத்துணைப் பொருத்தமற்றதாய் இருக்கின்றது பாருங்கள்.

கடவுள் வாழ்த்தில் வரும் 'எண் குணத்தான்' 'தாள்' என்ற சொற்கள் ஒரு மதக் கடவுளை, அதிலும் சிறப்பாக சைவ வைணவ மதக் கடவுளைக் குறிப்பனவேயன்றி, அவை எல்லா மதத்தினர்க்கும் ஒப்ப முடிந்த ஒரு மெய்ப்பொருளின் இயல்பைக் குறிப்பனவாகா. மெய்ப்பொருளுக்கு ஒரு வடிவமோ ஒரு பெயரோ இல்லை என்பது மூதறிஞர் முடிபாகும். மெய்ப்பொருள் என்றும் மெய்யுணர்வென்றும் பேசப்படுவது மக்களிடத்துக் காணப்படும் பகுத்தறிவையேயாகும். ஆனால், ஈண்டுப் பேசப்படும் மெய்ப்பொருளுக்கு ஒரு வடிவம் இருப்பதாகவும், அதனால் அவ்வடிவத்தின் திருவடியை வழிபடவேண்டுமென்றும்; அதற்குப் பெயர் இருப்பதாகவும், அதனால் அதற்கு எட்டுக் குணங்கள் உண்டென்றும் பேசப்படுகின்றது. அன்றியுந் திருக்குறளைப்பற்றி,

"ஒன்றே பொருள் எனின்
வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறுசமயத்தார்—
நன்றென
எப்பாலவரும் இயைபவை
வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி."

என்று சங்கப்புலவருள் ஒருவரான கல்லாடர் கூறிய கருத்திற்கும் இது மாறாய் இருக்கிறது. இனி, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற தமிழர் நெறிக்கும் இக் கடவுள் வாழ்த்திற்போந்த கருத்துக்கள் மாறுபட்டு நிற்கின்றன. ஆனால், இதுவும் இதுபோன்ற பிறவும் மதமயக்கம் ஏற்பட்ட சிலரால் புகுத்தப்பட்ட இடைச் செருகலாகும். திருக்குறளிலுள்ள இடைச் செருகல்கள் எல்லாவற்றையும் ஈண்டெடுத்துக் காட்டி விளக்கப் புகின் அதுவே ஒரு நூலாய் முடியும்.

திருக்குறளைப்பற்றி இன்னும் விரித்தெழுத முடியவில்லை. காலமும் பிறவசதிகளும் வாய்ப்பின் திருக்குறள் ஆராய்ச்சி என்ற ஒரு தனிக் கட்டுரை அல்லது நூல் எழுத முயல்வோம். என்றாலும், தமிழ் அறிவிலும் ஆராய்ச்சியிலும் பெரும்பொழுது கழிக்குந் தமிழறிஞர்கள், தங்களிடமுள்ள மதப்பற்றுதலை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுத் திருக்குறளுக்கு ஏற்பட்ட மாசைத் துடைத்து அதனை மன்பதையின் பொது நூலாக்க வேண்டுமென்பதும் எமது வேண்டுகோளாகும்.

ஆனால், சிலர் திருக்குறளுக்குச் சிறப்புச் செய்வதாகக் கூறிக் கொண்டு, அதனையும் இதிகாச புராணங்களில் ஒன்றெனக் கருதும் முறையில், அதற்கு இழுக்குத்தேட முயல்கின்றனர். எடுத்துக் காட்டாக, 'திருக்குறட் குமரேசவெண்பா' என்ற பெயருடன் திருக்குறளைப் பெருக்கி வெளியிட்ட ஒருவர், இராமாயண பாரதக் கதைகளையும், பதினெண் புராணக் கதைகளையும் வேறு பல வடமொழி நூல்களிலுள்ள கட்டுக் கதைகளையும் ஒன்று விடாமல் ஆராய்ந்தெடுத்து, ஒரு குறளுக்கு ஒரு கதை வீழுக்காடு 1330 ஆரியக் கதைகளைத் தனித் தமிழ் மறையாகிய திருக்குறட் கருத்துகளுக்கு ஒப்பிட்டுப் பேசித், திருக்குறளையும் ஆரியப் புராணக் குப்பைகளில் ஒன்றாக்குவதில் தமது அறிவைப் பாழிற் பயன்படுத்தியுள்ளார். எனவே, இந்த முறையில் திருக்குறளுக்குப் பணி செய்வதைப் பாக்கினும் வாளா இருப்பதே, அத்தகையினர் தமிழுக்குந் தமிழருக்கும் செய்யும் உதவியாகும் என்பதையும் ஈண்டுக் குறிப்பிடுவது பெரிதும் இன்றியமையாததாய் இருக்கிறது.

அவா, உயிர்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று என்பதோடு, மக்களின் செம்மையான வாழ்க்கைக்கு, அது மிக மிகத் தேவைப்படும் ஒன்றுமாகும். மக்களுக்கு அவா இல்லை யென்றால், உலகில் எந்த நல்ல காரியமும் செய்ய முடியாது. மக்களுக்குத் தேவைப்படும் எந்த நல்ல காரியமும் ஒருவருடைய விருப்பத்தினால்தான் செய்து முடிக்கப்படுகின்றது. ஒருவரால் செய்யக்கூடிய—செய்ய முடிகின்ற—செய்யவேண்டிய ஒரு நல்ல காரியத்தை அவர் செய்ய விரும்பவில்லையென்றால், அதாவது, அந்தக் காரியம் செய்வதில் அவருக்கு அவா உண்டாகவில்லை யென்றால், அந்த நல்ல காரியம் செய்யப்படாமல், அந்த நல்ல காரியத்தால் அடையக்கூடிய பயனைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பெற்றின்புற முடியாமலும் போய்விடுகிறதென்பதை உணரவல்லார் எவரும், அவா அறுத்தலை ஒருபோதும் விரும்பார்.

துறவிலக்கணத்தைக் கூறவந்த வள்ளுவர் அவா அறுத்தலின் அவசியத்தைப்பற்றிக் கூறினாரேயன்றிப் பொதுவாக அவர் அதனைவரவேற்கவில்லையே என்று சிலர் வாதாடக்கூடும். துறவிகள் எதற்காக இந்நாட்டில் இருக்கின்றனர் இருக்க வேண்டும் என்பதனை அறியும் எவரும், துறவிகளுக்குத்தான் அவா அவசியம் இருத்தல் வேண்டும்என்பதனை வலியுறுத்தியேதீருவர். ஏனென்றால் துறவிகள் என்றால் தன்னலம் கருதாது பொதுநலம் பேணி நடப்பவர்கள்என்றுதான் பொருள். எனவே, பொதுநலம் பேணுபவர்களுக்கு அவா அவசியம் இருத்தல் வேண்டும். பொது நலத்துக்கான நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற அவா, அதாவது விருப்பம் துறவிகளுக்குத்தான் மற்றவர்களைப் பார்க்கினும் அதிகம் இருத்தல் வேண்டும். எனவே, துறவிகள் அவா அறுத்து வாழவேண்டுமென்று கூறுவதும் அறிவுடைமையாகாது. ஆகையால் நாட்டில்—காட்டில் — கடலில்—வானில் — எந்த இடத்தில் வாழும் எவரும்—எந்த உயிரும் அவாவை அறுத்து வாழ முடியாது—கூடாது.

இனி, உயிர்கள் உலகில் வந்து பிறப்பதற்குக் காரணம், அவ்வுயிர்கள் செய்யும் வினைகளே என்றும், அவை நல்வினை தீவினை என் இருவகைப்படுமென்றும், அவை, அவ்வுயிர்களால் நுகரப்பட்டு முடிந்தவுடன் பிறப்பில்லையென்றுங் கடவுள் நூலார் கூறுகின்றனர். உயிர்களின் பிறப்பு முறையைப்பற்றி அறிவு நூலார் கொண்டுள்ள கருத்து வேறு.

நல்லது செய்தாலும் கெட்டது செய்தாலும் உயிர்களுக்கு பிறப்பு உண்டென்று கூறப்படும் மதநூற் கொள்கைப்படி பார்த்தாலும், அவா அறுத்தலை அது வரவேற்பதாக இல்லையே! நல்லதைச் செய்கிறவர்களும், கெட்டதைச் செய்கிறவர்களும் அவாவை அடிப்படையாக வைத்தே காரியங்களைச் செய்வதால் அவா அறுத்தல் எந்தக் காரணத்தைக்கொண்டும் — எவராலும் — எக்காலத்திலும் வரவேற்கப்படாதென்பது நன்கு தெளிவாகின்றது.

ஒரு ஒளி

இப்ஸன்

“சாக்கடையைத் திறந்து விட்டார், அழுக்கு நாற்றம் நாசியை அடைக்கிறது.”

“ரணத்தைக் கிறிவிட்டார்; சீழ் வடிகிறது. தாங்கமுடியவில்லை — வலிமட்டுமல்ல—அருவருப்புங்கூட”

இவையெல்லாம் ஹென்றிக் இப்ஸன் வாழ்ந்த காலத்தில் அவருடைய நாட்களைப் பார்த்தவர்கள் போட்ட கூச்சல். பிடிக்காத சமூக ஊழல்கள் அம்பலமானதும் கொக்கரிக்க ஆரம்பித்தார்கள் மக்கள். அவற்றை மூடி மறைத்து மயில், குயில், மலர், வனம் என எழுதிக் குவித்தவர்கள் மத்தியிற் புதுமைக் கவிஞராய் இப்ஸன் புராணங்களையும் கனவுகளையும் ஒதுக்கிவிட்டுத் தனி வழி போனார். தம்மைச் சுற்றி உள்ளவர்களைப்பற்றி, மனித இதயத்தில் நிகழ்வதைப்பற்றி—எதிர்ப்பைப்பற்றி—கவலைப்படாமல் நாடகங்கள் எழுதினார்.

இப்ஸன் நார்வே தேசத்தில் 1828-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் திகதி பிறந்தார். ஆனால் இறுதியில் இறக்கும்பொழுது 1909-ம் ஆண்டு மே மாதம் 23-ந்திகதி அவர் உலகம் புகழும் நாடகாசிரியர். மிகச் சிறிய நாடு நார்வே. அந்நாட்டு மொழியைப் பேசுவோரும் அதிகம் இல்லை. ஆனால் அவருடைய நாடகங்கள் எத்தனை மொழிகளிற் பெயர்க்கப்பட்டுள்ளன என்றோ, எத்தனை மேடைகளில் நடிக்கப்பட்டிருக்கின்றன என்றோ கணக்கெடுப்பதுமுடியாத காரியம். அத்தனை உலகப் பிரசித்திப்பெற்ற மேதை அவர்.

இத்தனை புகழுக்கும், எல்லாரும் இப்படி ஏகோபித்துக் கொண்டாடுவதற்கும் காரணம் என்ன? அப்படித் தன் பேனாவினால் என்னமாயம் செய்தார்? அவர் எழுத்தில் என்ன மந்திரம் இருந்தது?

அவரே சொல்லுகிறார், “நான் நாடகம் எழுதவுமில்லை. நாடக பாத்திரங்களைச் சிருஷ்டிக்கவுமில்லை. என்னைச் சுற்றி நடந்ததைக் கண்டேன்; எழுதினேன். நான் சந்தித்தவர்களைப் பேனாமூலம் சித்திரமாகத் தீட்டினேன்; அவ்வளவேதான்.”

அவர் பாத்திரங்களை மக்கள் கட்டுக்கதையாக, கற்பனை உருவங்களாக மதிக்கவில்லை. அவள் அப்படி நடக்கலாமா, இப்படிச் செய்தது சரியா என்றெல்லாம் அவர் பாத்திரங்களைப் பற்றி விவாதிக்கத் தலைப்பட்டார்கள், அவ்வளவுதான் சூத்திரம்.

அவருடைய சொந்த வாழ்வும் அவரோடு தொடர்புள்ளவர்களின் அனுபவங்களும் அவருடைய நாடகங்களிற் பிரதிபலிப்பதால்தான் அவருக்கு ஈடில்லா வெற்றிகிடைத்தது. அவரோடு சேர்ந்தவர்கள்பலர் தங்களைப்பற்றி எழுதிவிட்டார் என்று குறைப்பட்டது உண்டு, அதனால்தான் உயிருள்ள பாத்திரங்களை, நடமாடும் உருவங்களை, நாம் அடிக்கடி சந்திக்கும் பிரகிருதிகளை, ஏன்? சிலசமயம் நம்மையுங்கூட, இப்ஸனின் இலக்கிய சிருஷ்டிகளில் அடிக்கடி காணமுடிகிறது. முன்னால் வாழ்ந்தவர்களின் பாணிக்கு முற்றிலும் புறம்பானது இவர் போக்கு.

இவர் வாழ்வில் இன்னுமொரு புதுமை, இளமையில் வறுமையில் தான் வாழ்ந்தார். கவிஞர்கள், கலா மேதைகளின் பரம்பரைச் சொத்தல்லவா தரித்திரம்? ஆனால் இருபதாவது வயதில் உண்ண, உடுக்க, வழியின்றி இருந்தவர் எழுபத்தெட்டாவது வயதிற் கோடீசுவரராய் இறந்தார் என்றால், வியப்பாயில்லையா? உயிரோடு இருக்கும் வரை மேதாவிகளுக்கும் மதிப்புக் கிடையாதென்பது இவர் விஷயத்தில் உண்மையல்ல.

முதலிற் கொஞ்ச காலம் மருந்து கலக்கப் பழகினார். வேலை நிலைக்கவில்லை. மருத்துவ கலாசாலையிற் படிக்க எண்ணினார், பரீட்சை தேறவில்லை. நல்லவேளை! வைத்திய படிப்பு என்ற ஆசையை அதோடு மூட்டை கட்டிவைத்தார். தனிமனிதருக்கு மருந்து கலந்து கொடுக்கவில்லை. சமூகப் புண்களுக்குச் சத்திர வைத்தியம் செய்யவும், மனிதரை உள்நின்று அரித்து, அறக்கும் வியாதிகளுக்கு நிவாரணம் தேடினார்!

பதினெட்டாவது வயதில் அவர் எழுதிய முதல் கவிதை ‘ராஜிநாமா’ என்பது 21-வது வயதில் அவருடைய முதல் நாடகம் ‘கடாலினா’ எழுதப்பட்டது. இதன்பின் அவர் எழுதிய தேசீய கீதங்களுக்கும், நாடகங்களுக்கும், கதைகளுக்கும் புது உருவங் கொடுத்த பழைய கதைகளுக்கும் கணக்கே இல்லை.

பேனாவைத் தொடவேண்டியது தான்; அது தானாகவேஓடும். எழுதுவார், அப்புறம் திரும்பத் திரும்பத் திருத்துவார். சஷ்டப்படுவார், தன் நாடகமே நினைவாக உலாவுவார். யாரைக் கண்டாலும் தன் நாடகத்தைப்பற்றிப் பேசுவார். ஒவ்வொரு வார்த்தையும் சரியாக அமையும்வரை அவருக்குப் ‘பிரசவ வேதனை’ தான். காட்சி ஜோடனை, அரங்க அமைப்புமுதலியனவற்றைப் பற்றியும் நுணுக்கமான குறிப்புக்கள் எழுதி விடுவார்.

அவர் எழுதிய நாடகங்களிற்சிறந்தது ‘இதுதான்’ என்று விமர்சகர்களுக்கும் இரசிகர்களுக்கும் ஒருமுகப்பட்ட அபிப்பிராயம் இல்லை. ஒவ்வொன்றிலும்புதுமைகாண்கிறார்கள்; போற்றுகிறார்கள். காரணமில்லாமல் என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்த விமர்சகர்களைப்பற்றி இப்ஸன் கொண்டிருந்த கருத்து விசித்திரமானது. ‘காட்டு வாத்து’ என்ற நாடகத்தின் கையெழுத்துப் பிரதியை பிரசுரகர்த்தருக்கு அனுப்பும் போது அவர் எழுதிய குறிப்பு: “இந்த நாடகம் என் தயாரிப்புகளில் ஒரு தனிரகம். முந்தியவற்றிலும் பார்க்க இதன் அமைப்பு எவ்வளவோ மாறுபட்டது. இதற்குமேல் நான் ஒன்றும் கூறவில்லை. தேவையானதை விமர்சகர்களே கண்டுகொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் மெல்லுவதற்குப் போதிய அவல் கிடைக்காமற் போகாது. எப்படியாயினும் பேசுவதற்கும் விவாதிப்பதற்கும் வேண்டியவற்றை அவர்கள் காணத் தவறமாட்டார்கள். அவர்கள் கயிறு திரிக்கப் போதியகருத்துக்கள் இதிலே உள்ளன!”

“ஈழகேசரி”

திருவள்ளுவர் நகர், அங்கே! திண்டாட்டம், இங்கே!!

"அவசியமில்லை" — எனத் தெரிவித்து, டில்லி மந்திரிகள் தீட்டியனுப்பிய உத்திரவொன்றை சென்னை ஏடுகள், குதூகலமாகப் பிரசுரித்துள்ளன. சென்னை ஏடுகளின் கவனத்தில் களிப்பைப் பெய்த அந்த உத்திரவு இதுதான், "அத்யாவசியமான நிலை ஏற்பட்டாலொழிய ஊர்களின் பெயர்களை மாற்றியமைக்கவேண்டிய அவசியமில்லை"

*

இந்தச் சுற்றறிக்கை அனுப்பவேண்டிய 'அவசியம்' டில்லி பீடத்துக்கேன் ஏற்பட்டது?—அதிலும், அகில உலகப்பிரச்னைகளில் ஆழ்ந்து கிடக்கும் ஆசிய ஜோதி, 'சில்லரை விஷயமான' இதில், இவ்வளவு அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன? அந்த சுற்றறிக்கையைக் கண்டு, சென்னை ஏடுகள், குதூகலப்படுவானேன்—கொட்டை எழுத்துக்களில் பிரசுரிப்பானேன்? கல்லக்குடி' பெயர் மாற்றப் போராட்டத்திலீடுபட்ட "நமக்காக" இந்தச் சுற்றறிக்கை தீட்டப்பட்டதாகக் கருதி, அவைகள், எக்களிப்பு கொள்ளுகின்றன! அப்படியே, வைத்துக்கொள்வோம். 'நமக்காகவே'—இந்த உத்திரவு தீட்டி அனுப்பப்பட்டதாகவேயிருக்கட்டும். இதனால், என்ன விளங்குகிறது? அவர்களாலேயே 'சில்லரை விஷயம்' — என்று, கூறப்பட்டது. 'இதுவா, முக்கியம்?'—என்று கேட்கப்பட்டது. 'இதற்காகவா, ஒரு அறப்போர்?'—என்றனர் சில அதிமேதாவிகள். ஆனால், அந்த அறப்போரின் மூலம், டில்லியின் போக்கை, மக்களுக்கு உணர்த்தவே நாம் விரும்பினோம்.

"தன்னுடைய ஆதிக்கத்தை மட்டுமல்ல — அதன் சின்னத்தைக்கூட அசைக்கச் சம்மதியாது — அத்தகைய பீடம் டில்லி" என்பதை உணர்த்திவிட்டது, இந்தச் சுற்றறிக்கை.

திடீர், திடீரென்று முன்பு, பல ஊர்களின் பெயர்கள் மாற்றப்பட்டது, கவனமிருக்கலாம். 'மதுரை' என்ற பெயரில் வடநாட்டில் ஒரு பெயரிருப்பதால், தென்னாட்டு மதுரைக்கு மாற்றுப் பெயர் சிபார்சு செய்தது, டில்லி! தமிழ்நாட்டிலுள்ள பல பெயர்களையும், சென்னை அரசியலார், மாற்றியது கவனமிருக்கலாம். அப்போது, இவ்விதம் எந்தச் சுற்றறிக்கையும், கிளம்பவில்லை. ஆனால், இப்போது, புறப்படுகிறது! 'அவசியமேற்பட்டாலொழிய எந்த ஊரின் பெயரையும் மாற்றவேண்டுவதில்லையாம். பஞ்சாயத்து போர்டுகள்—எம். எல். ஏ-க்கள் — மக்கள் மகஜர்கள், இத்தனையும் அனுப்பப்பட்டதே. இது, "அவசியம்" என்பதைக் காட்டும் அளவுகோலாக இல்லையா? அல்லது, 'அவசியம்' என்பதை அளக்க 'டில்லி பீடம்' வைத்திருக்கும் அளவுகோல் என்ன என்பதும் புரியவில்லை! இவைதான் அளவுகோல், எந்த நாட்டிலும். சென்னைச் செங்கோலேந்திகள், இந்த அளவு கோலை மதித்தால், தம்மிஷ்டப்படி நடவடிக்கை எடுக்கவும், செய்யலாம். அதற்கு, வழியிருப்பது போலவே, டில்லி உத்திரவிட்டிருக்கிறது.

*

மக்கள் மன்றங்கள், ஒரு கோரிக்கையை அனுப்பினால், அதனை மதித்து நடக்க, எந்த அரசாங்கமும் தயங்கக் கூடாது. இதுதான், ஜனநாயகம். நமது மாநிலத்தின் ஒரு மூலையில் குட்டித் தர்பார் புரியும் 'பிரெஞ்சு ஆதிபத்யவாதி'கள் கூட, இந்தப் பண்பைப் பெற்றிருக்கின்றனர். புதுச்சேரி நகரசபையினர் அண்மையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள்—"புதுச்சேரிக்குப் பக்கத்திலுள்ள "சுண்ணாம்புக் காளவாய்" எனும் ஊரின் பெயரை "திருவள்ளுவர் நகர்" என்று மாற்றவேண்டும்" என்பதாக இத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு, பிரெஞ்சு சர்க்கார், உத்திரவிட்டு விட்டது. திருவள்ளுவர் நகர், அங்கே, இனித்திகழும்! ஆனால், இங்கோ—அந்தப் பிரெஞ்சு ஆதிபத்யத்தைக் கண்டித்து தமது தேசிய வீரத்தைக் காட்டிக்கொள்ளும் 'தியாகிகள்' டால்மியாபுரத்தை மாற்றத் தயங்குகிறார்கள்! புதுவையில், புதுப் பெயர் சூட்ட அனுமதிக்கப்படுகிறது. இங்கே, பழைய பெயரை வைக்க, அனுமதி மறுக்கப்படுகிறது.

*

ஆத்திரமும், ஆவேசமும்—ஆதிபத்தியவாதிகளின் சொந்தச் சொத்தாகும். தம்முடைய கித்தாப்புக் குறைந்திடுமோ, எனும் பயத்தில், மக்கள் குரல், எதானாலும், அதைக் கண்டு மருள்வார்கள்! அந்த மருட்சியை வெளியார் தெரிந்துகொள்ளக் கூடாதே யென்பதற்காக, அதிகாரத் தர்பாரின் வேகத்தைக் காட்டுவார்கள். இதனை விளக்குவது போலவே, இந்தச் சுற்றறிக்கை, கிளம்பியிருக்கிறது. இந்த அறிக்கையிலும், ஒரு சூட்சமம், காணக் கிடைக்கிறது. அதாவது, 'அவசியமேற்பட்டால்' மாற்றலாம்! இந்த 'அவசியத்தை' நிர்ணயிக்கும் பொறுப்பை, மாநில சர்க்கார்களுக்கே, டில்லி வழங்கியிருக்கிறது இதனால், தன்மீது, பழிவாராதபடி, செய்துகொண்டிருக்கிறது. "ஏன் மாற்றவில்லை?" என்று கேட்டால், "எங்கள்மீது குற்றமில்லை. மாகாண சர்க்கார் செய்திருக்கலாமே" என்று கூறிக்கொள்ளலாம்! "மாற்றட்டுமா?" என்று மாகாண சர்க்கார் கேட்டால், "அவசியமா?" என்று கேட்கலாம்!! இவ்விதம், 'மதில்மேல் பூனை' போல் ஆடியபடி சூரண்டலைத் தொடர்ந்து நடத்த எண்ணுகிறது, டில்லி. இதனால்தான், நமக்கு நேரடியான பதில் கிடைக்கவில்லை. புதுவையில் திருவள்ளுவர் நகர், காட்சி தருகிறது! இங்கோ, தமிழ்ப் பெயரிட, தடை செய்யப்படுகிறது!!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
55, Tirukkachinambi St., Kancheepuram.